Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2015

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## தேவனுடைய கண்ணின் மணி

ஒரு தேசத்தின் மறுபிறப்பு • இந்த உலகத்திற்கு இஸ்ரயேலின் பங்களிப்பு

யூதர்களை வெறுப்போர் மற்றும் இஸ்ரயேல் • ஜனங்களை இலக்கம் பார்த்தல்

சாலொமோன் ஆலயத்திலுள்ள பாடங்கள்

## தேவனுடைய கண்ணின் மணி

# ஆதியிலே



நம்முடைய காலங்களில், இஸ்ரயேலின் மறுபிறப்பு, மிகப் பெரிய நம்பிக்கைக்கு உணர்ச்சியூட்டும் சம்வங்களில் ஒன்றாகும். தேவன் அவருடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்ளுகிறவராக மட்டுமல்ல, அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல், மிக அருகில் இருப்பதையும் இது சாட்சியிடுகிறது.

வசனங்களில் காணப்படும் - "அவருடைய கண்ணின் மணி" என்ற சொற்றொடர் - தேவன் இஸ்ரயேலுக்காகக் கொண்டிருக்கும் விசேஷித்த அன்பையும் அக்கறையையும் விவரிக்கிறது. ஆனால் இஸ்ரயேல் 1845 வருடங்களாக தண்டனையைச் சகித்துக்கொண்டிருக்கும்போது, தேவனுடைய இரக்கத்தைத் தொலைத்தார்கள். அக்காலமுதல், யூத ஜனங்கள் மிகுந்த உபத்திரவத்தை அனுபவித்தார்கள். சுவிசேஷ யுகம் முழுவதிலும், யூதர்கள்மேல் வந்த துன்பங்கள் மற்றும் உபத்திரவமான சம்பவங்களின் ஒரு பகுதியான வரிசையை இந்தக் கட்டுரை நமக்களிக்கிறது. தேவனுடைய ஜனங்களை இப்படிப்பட்ட பழி வாங்கும் எண்ணங்களோடு, மோசமாக நடத்தினவர்கள் அனுபவிக்கக்கூடிய பயங்கரமான பின்விளைவுகளைக்குறித்து சகரியாவின் வார்த்தைகள் முன் அறிவிக்கப்பட்டது. "அவருடைய கண்ணின் மணியைத் தொடக்கூடியவர்களுக்கு எதிராக தேவன் அவருடைய கையை அசைப்பார் என்று அவர் கூறினார். (சகரியா 2:8, 9)

"ஒரு தேசத்தின் மறுபிறப்பு - ஒரு நவீன நாளின் அற்புதம்" என்ற தலைப்பு, இஸ்ரயேலின் மறுபிறப்புக்காக வழிநடத்தின சில நிகழ்வுகளை மீண்டும் புரட்டிப் பார்க்கிறது. அரசியல் மற்றும் இராணுவ சம்பவங்களை மேற்கொண்ட தேவனுடைய திகைப்பூட்டும் கரத்தின் பெருமுயற்சிகளை விவரிக்கிறது. ஆறு நாள் போரின் பிரதான இயக்குனராகிய ஈஸர் வெயிஸ்மேன் (Ezer Weizman), "தேவனுடைய விரல்" என்று கூறி அவர் கண்ட அந்த அற்புதத்தை விளக்கினார்.

இந்த மிகச் சிறிய தேசத்திற்குள்ளிருந்து வந்த பல எதிர்ப்புகளைக்குறித்த விளக்கங்களை "இன்றைய உலகத்திற்கு இஸ்ரயேலின் பங்களிப்பு" என்ற தலைப்பு விவரிக்கிறது. 23% நோபல் பரிசுகள் யூதர்களுக்கு இதுவரையில் அளிக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மனித நேயம் முயற்சிகள் உலகத்தில் தீமைக்குப் பலியான அனைவருக்கும் உதவி அளித்துள்ளது. மனித மேம்பாட்டை அக்கறையோடு கவனிக்க வேண்டும் என்ற யூதர்களின் நம்பிக்கையின் பலனாக இப்படிப்பட்ட பல மேன்மையான முயற்சிகள் எடுக்கப்பட்டது. ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியாக, இந்த முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு, இஸ்ரயேல், அடிதளத்தை இப்போதே போட்டுக்கொண்டிருக்கிறது.

யூதர்களின் மேலுள்ள வெறுப்ப உயர்ந்துக்கொண்டிருப்பதையும், அதனால் ஐரோப்பிய யூதர்களின் குடிபெயர்வதற்கான பங்களிப்பையும் துல்லியமாக, "யூதர்களை வெறுப்போர் மற்றும் இஸ்ரயேல்" என்ற தலைப்பு குறிப்பிடுகிறது. இன்று சில தேசங்கள் இஸ்ரயேலை ஆதரிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் இன்று இஸ்ரயேல் அச்சுறுத்தப்பட்டாலும், தேவன் அவர்களை விடுதலைச் செய்வார் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது.

இஸ்ரயேலில் யுத்த வீரர்களை தாவீது இலக்கம் பார்க்க விரும்பிய காரியத்தின் நிமித்தம் தேவன் அதிருப்தி அடைந்ததை, "ஜனங்களை இலக்கம் பார்த்தல்" என்ற தலைப்பில் காணலாம். தாவீதின் விசுவாச குறைச்சல், 70,000 பேர்களின் உயிரைப் பலி வாங்கியது.

உள்ளம் உணர்ந்து, மனம் வருந்துதலுக்குப் பின், ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தின அதே இடத்திலும், அதற்குப்பின் ஆலயம் கட்டப்படக்கூடிய அந்த இடத்தில் ஒரு பலிபீடம் கட்டி அதில் பலிகளைச் செலுத்தும்படி தாவீதுக்கு கட்டளையிடப்பட்டது.இந்த உலகத்தில் பாவம் நுழைந்தபின், தேவைப்படும் ஒரு காணிக்கையை இங்கு ஈடுபலியின் ஒரு அருமையான சித்திரத்தை நாம் காணலாம்.

தேவன் தம்முடைய சிந்தையில் கொண்டிருக்கும்அழகான கட்டமைப்பின் அடையாளங்களின் ஆழமான கண்ணோட்டங்களை, "சாலொமோனின் ஆலயத்திலிருந்து பாடங்கள்" என்ற தலைப்பு தருகிறது. ஆலயத்தின் நிஜமானகற்கள் ஆயத்தத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதினால்,வெகு சீக்கிரத்தில் இந்த உலகத்திற்குத் தேவைப்படும் ஆசீர்வாதங்கள் இந்த உலகத்தில் மீது பொழியும்.

### செப்-அக் 2015


**அவருடைய கண்ணின் மணி** 2

பல உபத்திரவங்களின் வழியாக, கவனித்துக்கொண்டிருக்கும் ஒரு கண்

**ஒரு தேசத்தின் மறுபிறப்பு** 9

ஒரு நவீன நாளின் அற்புதம்

**இந்த உலகத்திற்கு இஸ்ரயேலின் பங்களிப்பு** 16

ஆசீர்வாதத்திற்கான ஆற்றல்

**யூதர்களை வெறுப்போர் மற்றும் இஸ்ரயேல்** 22

தற்கால பிரச்சனை

**ஜனங்களை இலக்கம் பார்த்தல்** 24

தவறும் தண்டனையும்

**சாலொமோன் ஆலயத்திலுள்ள பாடங்கள்** 29

சபை வகுப்பாரின் ஒரு சித்திரம்

**தீர்க்கதரிசனத்தில் இன்று . . .** 34

உலகின் சமுதாய நிலை புள்ளி விவர ஆய்வில் ஒரு மாற்றம்



பல உபத்திரவங்கள் வழியாகக் கவனித்துக்கொண்டிருக்கும் ஒரு கண்

# அவருடைய கண்ணின் மணி

**"கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார்."** (உபாகமம் 32:9, 10)

"அவருடைய கண்ணின் மணி" என்ற இந்தச் சொற்றொடர் வசனங்களில் பலமுறைகள் காணப்படுகிறது. தேவன் தாம் தெரிந்தெடுத்துக் கொண்ட ஜனங்கள்மேல் வைத்திருக்கும் அன்பையும், அக்கறையையும் விவரிப்பதற்கு இந்தப் பிரியமான சொற்றொடர் தேவனால் பயன்படுத்தப்பட்டது. இயற்கையான கண்கள் விலையேறப் பெற்றதும், பாதுகாக்கப்பட வேண்டியதுமாக இருப்பதினால் தேவன் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

"இந்தச் சொற்றொடரின், வலிமைக்கும், மென்மைக்கும் மிஞ்சினது ஒன்றுமில்லை. ஒரு மனுஷன் தன்னுடைய கண் பார்வையைப் பாதுகாப்பதற்காக, எவ்வளவு முக்கியமாக கவனம் செலுத்துகிறாரோ, தேவனும் அவருடைய ஜனங்களின் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் கவனம் செலுத்துகிறார். எவ்வளவு வியக்கத்தக்க மனமிரங்குதல்" என்று ஆதாம் என்பவர் கிளார்க் ஆச்சரியப்படுகிறார்.

இஸ்ரயேல் ஜாதி உருவானது முதல், தேவனுடைய இருதயத்தில் ஒரு விசேஷித்த இடத்தைப் பெற்றிருந்தார்கள். நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் வழியாக, அவர்களுக்கு தேவன் தம்முடைய நீதியைக் கற்பித்து, அவர்களுக்குப் பாதுகாவலராக இருந்தார். இஸ்ரயேலை தம்முடைய சொந்த சுதந்தரம் என்றும் தேவன் அவர்களை விவரித்தார் (உபாகமம் 32:9). இஸ்ரயேல் தேவனுடைய சுதந்தரமாக இருப்பதால், ஆபிரகாமின் வாக்குத்தத்தின் வழியாக அனைவருக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வதங்களை இஸ்ரயேலின் மூலம் ஒரு விசேஷித்த வழியாகக் கொடுப்பதற்கான தேவனுடைய நோக்கங்களை நாம் அறிந்துகொள்ளலாம்.

**விலையேறப்பெற்ற பிரமாணத்தைக் காத்துக்கொள்ளுதல்:**

மீண்டுமாக, இந்தச் சொற்றொடரை நீதிமொழிகள் 7:2-4-ஆம் வசனங்களில் காணலாம். "என் கட்டளைகளையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய். அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்."

இங்கு இஸ்ரயேலர்கள், தாங்கள் பெற்ற நியாயப்பிரமாணத்தை, கண்ணின் மணிபோல பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், அதை அவர்கள் புதையலைப்போல பாவிக்க வேண்டுமென்று கூறுகிறார். அவர்கள் அதை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அதை அவர்கள் கடைபிடித்து, பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள வேண்டும். அதை விலையேறப் பெற்றதாக மதித்து பாதுகாக்கவும் வேண்டும்.

அந்தப்பிரமாணத்தை அவர்களின் விரல்களில் கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்ட போது இவை அனைத்தையும் உங்கள் விரல் நுனியில் வைத்திருக்கவேண்டுமென்றுபொதுவாக நினைப்பூட்டுவதற்கான ஒரு சொல்லாக இருந்தது. எப்போதும் அதை ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும். மற்றொருவார்த்தைகளில் சொல்லப் போனால், அதைப் பழக்கப்படுத்திக்கொண்டு, அதன்படி வாழ வேண்டும். இஸ்ரயேலர்கள் இந்தப் பிரமாணங்களை தங்களுடைய இருதயமாகிய பலகையில் எழுத வேண்டுமென்பதே இந்த ஆலோசனையின் சாராம்சமாகும். அதோடுகூட ஒரு உணர்வுள்ள தொடர்பை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். எரேமியாவினால், தீர்க்கதரிசனமாக இயேசு அறிவிக்கப்பட்டதுபோல அவர்கள் அதை நேசிக்க வேண்டும். "உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;" (எரேமியா 15:16), "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய

விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது." (சங்கீதம் 40:8)

கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய இருதயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு கோட்பாட்டை இந்த வார்த்தைகளில் காணலாம். நாம் சத்தியத்தை நேசித்து, அது நமக்கு அறிவிக்கக்கூடிய நிலையில் வாழ வேண்டும். புது சிருஷ்டியை ஆட்சி செய்யும் அந்தக் கோட்பாடுகளைச் சாதாரணமாக நாம் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளாகப் பார்த்தால், நாம் அவைகளை நம்முடைய இருதயத்தில் எழுத வாய்ப்பில்லை. நாம் அவைகளை நம்முடைய கண்ணின் மணியைப்போல பாதுகாக்க மாட்டோம். அதைப் புதையலைப்போல பாவித்து, நம்முடைய விரல்களில் கட்டிக்கொள்ளவும் மாட்டோம். சத்தியத்தின் கோட்பாடுகளின் மதிப்பை, தேவன் விரும்புகிறபடி, அவைகளை நாம் கீழ்ப்படிவதோடு மட்டுமல்ல, நாம் அதை நேசித்து, புதையலைப்போல பாதுகாக்க வேண்டும்.

**தாவீதின் ஒரு ஜெபம்:**

தாவீது தேவனிடத்தில் மனமார்ந்து ஜெபிக்கும்போது, "கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்.என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்" (சங்கீதம் 17:8, 9) என்று கூறினார்.

தாவீது தன்னுடைய எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ளும்படிக்கு தேவனிடம் வேண்டினார். யுத்தவீரராகிய தாவீது இராஜா இடைவிடாமல் தாக்குதல்களின் கீழ் இருந்ததினால், அவர் தெய்வீக பாதுகாப்பைத் தேடினார். அவருக்கு எவ்வளவாக தேவன் தேவைப்படுகிறார் என்பதை புரிந்துகொள்ளும் அளவுக்குத் தேவையான ஞானத்தை தாவீது பெற்றிருந்தார். அவருடைய வாழ்க்கையின் துவக்கத்திலே இந்தப் பாடத்தை அவர் கற்றறிந்திருந்தார்.

இதிலிருந்து சகோதரர் ரசல் ஒரு ஆவிக்குரிய பாடத்தை எழுதினார். "தேவன் பேரில், விசுவாசத்தின் வழியாக நாம் போரிடக்கூடிய ஒவ்வொரு போரும், ஜெயிக்கக்கூடிய ஒவ்வொரு ஜெயமும் வருங்கால பிரச்சனைகளை எதிர்கொள்ள தேவையான பலத்தை வளர்ச்சியடையச் செய்கிறது" (R1902). இக்காலத்தில் தாவீது அவருடைய எதிரிகளால் தாக்கப்படும்போது, தேவன் தாவீதை அவருடைய எதிராளியிடமிருந்து விடுவித்தக் காரியங்களை அவர் நினைவில் கொண்டுவரும் போதெல்லாம், தேவன் அவரை இந்த முறையும் விடுவிப்பார் என்ற நம்பிக்கை அதிகரிக்கும். இந்தக் கோணத்தில், விசுவாசத்தின்மேல் விசுவாசம் கட்டப்படுவதை நாம் காணலாம். இக்கால சோதனைகளுக்கான பலத்தை அதிகரிப்பதற்குக் கடந்த கால அனுபவங்கள் மிக அவசியமாக உள்ளது. தேவையான பாதுகாப்பை தேவன்தாவீதுக்கும் இஸ்ரயேலுக்கும் கொடுத்தாலும், தாவீது அவாபங்குக்கு தேவன் மேல் நம்பிக்கைக்கொண்டார்.

**புலம்ப ஒரு காலம்**

"அவர்கள் இருதயம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகிறது: சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே." (புலம்பல் 2:18)

பாபிலோன் சிறையிருப்பின்போது, எருசலேம் பாழாக்கப்பட்டதினால் புலம்பியதை எரேமியா தீர்க்கதரிசி புலம்பல் என்ற புத்தகத்தை எழுதினார். எரேமியா இஸ்ரயேலை அதிகமாக நேசித்ததின் நிமித்தம், அது துயரப்பட்டு வேதனைப்படும்போது மிகவும் வியாகுலப்பட்டார். தேவன் இஸ்ரயேலை ஆசீர்வதிக்கும்படி ஏங்கினார். ஆகவே அவர்களின் இருதயங்கள் மாறுவதற்கு விடாமுயற்சி செய்தார். துரதிர்ஷ்டவசமாக, அவருடைய வாழ்நாட்களில், அனைவரும் முழுமையாகச் சீர்பொருந்தவில்லை. "மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு" என்று எரேமியா எழுதும்போது, அவர் எருசலேம் அழிக்கப்பட்டதற்காக தன்னுடைய வேதனைகளைத் தெரிவித்தார்.

"உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே" (வசனம் 18) என்று அவர் சொன்னபோது, மற்றவேதபகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்திற்கு, மாறான ஒரு விளக்கத்தைக் குறிப்பிட்டார். "இஸ்ரயேலின் பாழ்க்கடிப்புக்காக கண்ணீர் விடுங்கள்" என்று எரேமியா ஜனங்களிடம் கூறினார். "உங்கள் கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டாம்" என்று (The New American Standard Versin) மொழிபெயர்ப்பு

கூறுகிறது. ஆகவே, இது தேவனுடைய பாதுகாப்பையோ, தேவனுடைய இருதயத்தில் இஸ்ரயேலுக்குஉள்ளஇடத்தைப்பற்றி சித்தரிக்கவில்லை. மாறாகஅவர்களின் இக்கட்டுகளில், துயரமடைந்த இஸ்ரயேலர்களைச் சித்தரிக்கிறது. பாபிலோனின் சிறையிருப்பு, இஸ்ரயேல் துயரமடைவதற்கு ஒரு மிகப் பெரிய காலமாக இருந்தது.

### அவருடைய கண்ணின் மணியை தொடுதல்

"என் கண்ணின் மணி" என்ற சொற்றொடர் இறுதியாக சகரியா 2:8-ஆம் வசனத்தில் காணப்படுகிறது. "பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் **கர்த்தர்** சொல்லுகிறார்; உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்."

இஸ்ரயேல் பாபிலோனிலிருந்து திரும்பிய பின் இந்தவார்த்தைகளஎழுதப்பட்டது. இஸ்ரயேலர்களைத்தண்டிப்பதற்காக, பாபிலோனியர்களும் அசீரியர்களும், கருவிகாளாக தேவனால் பயன்படுத்தப்பட்டார்கள். இதற்குமேலாக, இந்தத் தேசங்கள் கொடூரமானவைகளும், தீய நாட்டங்களால் ஊக்குவிக்கப்பட்டும் இருந்தது. ஆகவே, அவருடையஜனங்களின்மேல் செலுத்தப்பட்டதுன்மார்க்கமான செயல்பாடுகளினிமித்தம் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று தேவன் தீர்மானித்தார். அவர்கள் தேவனுடைய கண்ணின் மணியைத் தொட்டதினால், அதன் பலனாக அவர்கள் பாடுபட வேண்டியதாக இருந்தது.

வரலாறு அதைத் தவிர்க்கிறது. அசீரியர்கள் இஸ்ரயேலின்பத்துவடதிசையுள்ள கோத்திரங்களைக் கணக்கில்லாமல் அழித்தபோது அவர்களின் தலை நகரமாகிய நினிவே பட்டணம் அழிக்கப்பட்டு, அனைவரும் உபத்திரவப்பட்டார்கள். அதற்குப்பின் அவர்களின் ஆளுகையை பாபிலோனிடம் தொலைத்தார்கள். யேகோவா தேவனின் ஆலயத்தை இடித்து, யூதேயாவைச் சிறைபிடித்துப் போன பாபிலோனை மேதோ பெர்சியர்கள் வீழ்த்தினார்கள்.

இயேசுவின் முதல் வருகையின்போது இயேசு, எரேமியாவைப்போல, இஸ்ரயேலுக்கு வரப்போகிற உபத்திரவங்களை எண்ணி கண்ணீர் விட்டார். வரக்கூடிய தண்டனை, எரேமியாவின் காலத்தைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஏனெனில், சுமார் 1845 வருடங்கள் அவர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருப்பார்கள். தேவனின் ஆதரவு நிறுத்தப்பட்டபின், அவர்கள் பெறும் உபத்திரவங்கள்,இதுவரையில் அவர்கள் அனுபவித்த வேதனைகளுக்குஇணையாகஇருக்காது. ஆயினும், அன்று அசீரியா மற்றும் பாபிலோனைப்போல, சுவிசேஷ யுகத்தில், இஸ்ரயேலை நசுக்கினவர்ளுக்கு நிச்சயமாகத் தண்டனை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யூதர்களின் சிதறடிப்பின்போது அவர்கள் எவ்வளவு மோசமாக நடத்தப்பட்டார்கள் என்றும் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள் என்றும் கீழே வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ள சில சம்பவங்கள் காட்டுகிறது. அவர்கள் நடத்தப்பட்ட அந்தக் கொடூரமான நிலைகளைத் தாங்க முடியாததாக உள்ளது.

- கிபி 70-73: ரோம படை வீரர்கள் எருசலேமை அழித்து ஒரு மில்லயன் யூதர்களைக் கொன்று, 100,000 பேர்களை அடிமைப்படுத்தினார்கள். இஸ்ரயேலர்கள், ரோம சாம்ராஜ்யமெங்கும் சிதறடிக்கப்பட்டனர்.
- கிபி 113: சீப்புரு சிரேனே, எகிப்து மற்றும் மெசபொத்தோமியாவிலுள்ள யூதர்கள் ரோம சாமராஜ்யத்திற்கு எதிராகக் கலகம் செய்தார்கள். அதன் விளைவாக பல நூறாயிரம் யூதர்கள் மரித்தார்கள்.
- கிபி 132: ரோமாவுக்கு எதிராக பார் கோச்பா (Bar Kochba) 3- 1/2 வருடம் கலகம் செய்தார்கள். அதற்கான பழிவாங்கும் நடவடிக்கையில், சுமார் அரை - மில்லியன் யூதர்கள் வெட்டப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள்அடிமைகளாக விற்கப்பட்டுசிறைபிடிக்கப்பட்டார்கள். மீதியுள்ளவர்கள் பாலஸ்தீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார்கள். அதற்குப் பின் யூத மதம் ஒரு சட்ட ரீதியான மதமாக அங்கீகரிக்கப்படவில்லை.
- கிபி 135: ரோமர்கள் யூதர்களை நேரடியாக துன்பப்படுத்தத் துவங்கினார்கள். அவர்கள் விலக்கப்பட்டு, விருத்தசேதனம் செய்தாலும், தோரா

படித்தாலும், பஸ்காவின்போது புளிப்பில்லா அப்பம் புசித்தாலும் மரணதீர்ப்புக்குக் கையளிக்கப்பட்டார்கள். ரோம கடவுள் யூப்பித்தருக்கு ஒரு கோவிலை, எருசலேமின் ஆலய மலையில் பிரதிஷ்டைச் செய்தார்கள்.

- கிபி 200: யூதர்களாக மதம் மாறுவதை ரோம சக்கிரவர்த்தி செவிரெஸ் (Severus) தடை விதித்தான்.

**அதற்குப் பின் கிறிஸ்தவர்கள் யூதர்களைத் துன்புறுத்தத் துவங்கினார்கள்**

- கிபி 306: யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலுள்ள திருமண பந்தங்கள் மற்றும் சமுதாய சம்பந்தங்களை எல்வீராவில் (Elvira) உள்ள சினாடு (Synod) சபை தடை செய்தது.
- கிபி 315: யூதர்களாக மாறுவதைத் தடை செய்யும் ஒரு சட்டத்தை கான்ஸ்டான்டைன் (Constantine) அமுலுக்குக்கொண்டு வந்தான். யூதர்களுக்கு அதிகமான வரிகளைச் சுமத்தினான்.
- கிபி 325: நிசியா (Nicea) ஆலோசனைக் குழு, ஈஸ்டர் பண்டிகையையும், யூத பஸ்காவையும் பிரிக்க முடிவெடுத்தது. "வெறுத்து ஒதுக்கப்பட்ட ஜனங்களோடு நாம் பொதுவான எந்தத் தொடர்பையும் வைத்துகொள்ள வேண்டாம்.... யூதர்களின் கூட்டத்திலிருந்து நாங்கள் பிரிந்து வாழ விரும்புகிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.
- கிபி 337: யூத மனுஷன் கிறிஸ்துவ பெண்ணை விவாகம் செய்வது சட்டபடி குற்றம் என்று கூறி அவர்களுக்கு மரணதண்டனையை கான்ஸ்டான்டிஸ் (Constantius) சக்கரவர்த்தி வழங்கினான்.
- கிபி 379-395: யூத ஆலயங்களை தியோடோசியஸ் (Theodosius) என்ற சக்கரவர்த்தி அழித்துப்போட்டான்.
- கிபி 415: எகிப்து, அலெக்சாண்டிரியாவின் ஆயர்கள் யூதர்களை அந்தப் பட்டணத்திலிருந்து வெளியேற்றினான்.
- கிபி 418: "இது ஒரு விபச்சார விடுதி, துர் பழக்கவழக்கத்தின் இருப்பிடம், சாத்தானின் தங்கும் இடம், சீர்கெட்டுப்போவதற்கான ஸ்தலம், நம்பினால் பேரழிவுக்கு நடத்தும் ஒரு பாதாளம் இதுபோன்று எதைச் சொன்னாலும் தகும்" என்று ஜெரோம்என்ற ஒருவன் யூத ஆலயத்தைக்குறித்து எழுதினான்.
- கிபி 489-519: அந்தியோகியாவிலுள்ள யூத மத ஆலயங்களை கிறிஸ்தவ கூட்டங்கள் இடித்தது. டாபைன் (Daphne) (அந்தியோகியா அருகில்) மற்றும் ராவென்னா (Ravenna).
- கிபி 528: ஜஸ்டீனியன் சக்கிரவர்த்தி, ஜஸ்டீனியன் சட்டத் தொகுப்பை அமுல்படுத்தினான். போப்புக்கு மிக உயர்வான மத அதிகாரத்தைக் கொடுப்பதோடு மட்டுமல்ல யூத மத ஆலயங்களைக் கட்டுவதையும், எபிரெய மொழியில் வேதாகமத்தை வாசிப்பதையும், பொதுவான இடத்தில் அவர்கள் கூடுவதையும், ஈஸ்டருக்கு முன் பஸ்கா அனுசரிப்பதையும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வாதாடுவதையும் இது தடுத்தது.
- கிபி 535: யூதர்கள் எந்தப் பொதுவான பொறுப்பிலும் இருக்கக்கூடாதுஎன்றும், கிறிஸ்தவர்கள்மேல் எந்தவிதமான அதிகாரமும் பெறக்கூடாது என்றும் சமய குருக்களின் குழு முடிவெடுத்தது.
- கிபி 538: ஈஸ்டர் காலங்களில், யூதர்கள் பொதுவான இடங்களில் காணப்படக்கூடாது என்று மூன்றாம் மற்றும் நான்காம் ஓர்லியான்ஸ் (Orleans) ஆலோசனைக்குழுசட்டம்போட்டது. கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் இடையில் திருமணங்கள் தடைசெய்யப்பட்டது. கிறிஸ்தவர்கள் யூதர்களாக மாறுவது தடை செய்யப்பட்டது.
- கிபி 561: பிரான்சிலுள்ள உசஸ் (Uzes) என்ற ஆயர் தன்னுடைய டையாசிசிலிருந்து யூதர்களை வெளியேற்றினார்.
- கிபி 613: கடுமையான உபத்திரவம் ஸ்பானியவில் துவங்கியது. யூதர்கள் ஸ்பானியாவை விட்டு வெளியேற வேண்டியதாக இருந்தார்கள். அல்லது கிறிஸ்தவர்களாகமாறவேண்டியதாக இருந்தார்கள். ஆறு வயதுக்கு மேற்பட்ட யூத பிள்ளைகள், அவர்களின் பெற்றோரிடமிருந்துப் பிரிக்கப்பட்டு, கிறிஸ்தவ கல்வி கொடுக்கப்பட்டது.

- கிபி 722: போப் லியோ 111 யூத மதத்தை நிராகரித்து, ஆதரவற்ற யூதர்களை, அவர்களின் விருப்பத்திற்கு எதிராகஞானஸ்நானம் கொடுத்தான்.
- கிபி 855: இத்தாலியிலிருந்து யூதர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.
- கிபி 1078: யூதர்கள் எந்தப் பொறுப்புகளிலும் அல்லது கிறிஸ்தவர்களுக்கு மேலான நிலைகளிலும் இருக்கக்கூடாது என்று போப் கிரிகோரியன் VII (Gregory) சட்டம் இயற்றினான்.
- கிபி 1096: முதல் சிலுவைப் போராட்டம் துவங்கியது. இந்தப் போராட்டம், அடிப்படையாக எருசலேமை, முஸ்லீம்களிடமிருந்து விடுவிப்பதே நோக்கமாக இருந்தாலும், யூதர்கள் இரண்டாவது இலக்காக இருந்தார்கள். பரிசுத்த தேசத்திற்குப், போர் வீரர்கள், ஐரோப்பியா வழியில் கடந்துச் சென்றபோது பல யூதர்கள் சவாலிடப்பட்டார்கள். "கிறிஸ்துவைக் கொன்றவர்களே, சிலுவையைக் கட்டிக்கொள்ளுங்கள் அல்லது சாவுங்கள்" 12,000 யூதர்கள் ரையின் (Rhine) பள்ளத்தாக்கில் மட்டும்,முதல் சிலுவை போரில் கொல்லப்பட்டார்கள். இப்படிப்பட்ட எட்டு சிலுவை போராட்டங்கள் தொடர்ந்து நடந்தது. 1272-ஆம் வருடத்தில் ஒன்பதாம் சிலுவை போர் நடந்து முடிந்தது.
- கிபி 1099: சிலுவை போர் வீரர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்தில்எல்லாயூதர்களையும் பல வந்தமாக அடைத்து, அதற்குத்தீ வைத்தார்கள். அதிலிருந்து தப்பித்தவர்கள், மீண்டும் அந்த எரிகிற கட்டிடத்திற்குள் துக்கி எரியப்பட்டார்கள்.
- கிபி 1121: பெல்ஜியத்திலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.
- கிபி 1180: பிரான்ஸ் இராஜாவாகிய பிலிப்பு அகஸ்து யூதர்களின் சகல சொத்துக்களையும் (வீடுகள்,நிலங்கள்)எடுத்துக்கொண்டு அவர்களைத் தேசத்திலிருந்து வெளியேற்றினான்.
- கிபி1189:இங்கிலாந்தில் யூதர்கள் உபத்திரவப்பட்டார்கள். யூதர்களின் சகல சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு அநேகருடைய வீடுகள் சுட்டெரிக்கப்பட்டது.
- கிபி 1215: "யூதர்களும் முஸ்லீமுகளும் ஒரு விசேஷித்த ஆடையை அணிய வேண்டும்" என்ற நான்காம் லாட்டெரென் (Lateran) ஆலோசனைக் குழு, சட்டங்களை அமுல்படுத்தியது. கிறிஸ்தவர்களிடமிருந்து பிரித்து காண்பிக்கும்படியாக அவர்கள் வளையம்போல ஒரு அடையாள சின்னத்தையும் அணிய வேண்டியதாக இருந்தது. அதற்குப் பின் இந்தப் பழக்கம் மற்ற தேசங்களுக்கும் பரவியது.
- கிபி 1227: யூதர்கள், முட்டை வடிவத்தில் அடையாளச் சின்னம் அணிய வேண்டுமென்று நார்போனியில்(Narbonne) உள்ள மத குருக்களின் குழு முடிவெடுத்தது.1930-ஆம் வருடம் ஹிட்லரால் இந்தச் சட்டத்தில் திருப்திப்பட்டு, முட்டை வடிவமான சின்னத்திற்குப்பதிலாக தாவீதின் நட்சத்திரம் அவர்களுக்கு அடையாளச் சின்னமாகக் கொடுக்கப்பட்டது.
- கிபி 1229: ஸ்பானியாவில் உபத்திரவங்கள் துவங்கியது. கிபி 1252-இல் நான்காவது போப் இன்னோசென்ட் உபத்திரவப்படுத்துவதற்கு அங்கீகாரம் கொடுத்தான்.
- கிபி 1290: இங்கிலாந்திலிருந்து யூதர்கள் கொடூரமாக நாடுகடத்தப்பட்டார்கள். சுமார் 16,000 பேர் தேசத்தை விட்டுச் செல்ல வேண்டியதாக இருந்ததது.
- கிபி1298:ஆஸ்திரியா, பாவாரியா, ஜெர்மானியாவின் சில பகுதிகளிலும், யூதர்கள் உபத்திரவப்படத் துவங்கினார்கள். 140 யூத சமுதாயங்கள் அழிக்கப்பட்டது. ஆறு மாதத்திற்குள் 100,000 யூதர்கள் கொல்லப்பட்டார்கள்.
- கிபி 1306: பிரான்சிலிருந்து 100,000 யூதர்கள் நாடுகடத்தப்பட்டார்கள், அவர்கள் உடைகளை மட்டும் தோளின்மேல் வைத்து, ஒரு நாளுக்குரிய உணவை எடுத்துக்கொண்டு வெளியேறினார்கள்.
- கிபி 1321: ஜீனயீ, (Guienne) பிரான்ஸ், யூதர்கள் கிணறுகளில் விஷம் கலப்பதற்குத் தூண்டினார்கள் என்று குற்றம் சாட்டி, 5000 யூதர்களைக் கட்டி வைத்து உயிரோடு எரித்தார்கள்.
- கிபி 1347: புபோனிக் பிலேகு, (Bubonic Plague) அதைக் "கருப்பு மரணம்" என்றும் அழைக்கப்படும் வியாதி, ஐரோப்பாவில் 25 மில்லயன் பேரைக்

கொன்றது. சிறிதளவு யூதர்களுக்கு இந்த வியாதி பரவியிருந்ததை ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி, பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட சுத்திகரிப்பின் பிரமாணங்களும், உணவுக்குரிய பிரமாணங்களே இதற்கான காரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் சாத்தான் யூதர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான் என்றும் அதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் கிணறுகளுக்குள் யூதர்கள் விஷத்தைக் கலந்து விடுகிறார்கள் என்றும் வதந்திகளைப் பரப்பினார்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தி, கொன்று எரித்து விடுவதே அதற்கான தீர்வாக இருந்தது. "பாவாரியாவில், (Bavaria) 12,000 யூதர்கள் அழிந்துபோனார்கள். ஜெர்மனியில் 11,000 யூதர்களும், பிரான்சில் 2000 யூதர்களும் அழிக்கப்பட்டார்கள். பிரான்சிலுள்ள தூரில், (Tours) ஒரு மிகப் பெரிய குழி வெட்டப்பட்டு, அதில் எரியக்கூடிய விறகுகளில் ஒரே நாளில், 160 யூதர்களை எரித்தார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் நம்மை 13-ஆம் நூற்றாண்டின் மத்தியில் அழைத்துச் செல்லுகிறது. இந்நாள் வரைக்கும் யூதர்களுக்கு எதிரான சம்பவங்கள் பல நடந்துக்கொண்டு வருகிறது. யூத இனத்தை அழிப்பதற்கான போதுமான முயற்சிகளை நாம் இதுவரைக்கும் கண்டோம்.

இந்த உபத்திரவப்பட்ட ஜனங்களின் வாழ்க்கை திசை திரும்பத்தக்கதாக மற்றொரு சம்பவம் சுமார் 500 வருடங்களுக்குப் பின் நடந்தது.

### டிரைபஸ் (Dreyfus) விவகாரம்

1894-ஆம் வருடம் யூத சந்ததியால் வந்த பிரன்ச்சு தளபதி ஆல்பிரடு டிரெய்ஃபஸ், (Alfred Dreyfus) இரகசிய இராணுவச் சட்டத்தின் கீழ், தேச துரோகம் செய்ததாகப் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டார். தென் அமெரிக்காவிலுள்ள வடகிழக்கு கடற்கரை ஓரத்தில் சாத்தானின் தீவில், ஆயுள் கைதியாக இருப்பதற்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. பாரிசிலுள்ள ஜெர்மானிய தூதரகத்திற்கு பிரென்சு இராணுவ இரகசியங்களை அறிவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டார்.

அவருக்குத் தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன் பொதுவில் அவருடைய பதவியிலிருந்து நீக்கி, அவரை அவமானப்படுத்தினார்கள். ஜெர்மன் தூதரகத்தின் குப்பை கூடையில் காணப்பட்ட கிழிந்துபோன ஒரு காகிதமே டிரெய்ஙபஸ்சுக்கு (Dreyfus) விரோதமாகக் கொடுக்கப்பட்ட சாட்சியாக இருந்தது. ஆனால் அதற்குப் பின், அந்தக் காகிதத்தை எஸ்டர்ஹெசி (Esterhazy) என்ற பிரென்ச் படையின் தளபதி எழுதியதாக நிரூபிக்கப்பட்டது. ஆயினும், உயர நிலையில் இருக்கும் இராணுவ அதிகாரிகள், அந்தப் புதிய ஆதாரங்களை மறைத்து அவருடைய இராணுவ சோதனையின் இரண்டாம் நாளிலே அனைவரும் ஏக மனதுடையவர்களாகத் தீர்ப்பளித்தார்கள். டிரெய்ஃபஸ்சை குற்றமற்றவர் என்று அறிவிப்பதற்குப் பதிலாக, பிரென்சு அதிகாரிகள் சில பொய்யான சான்றுகளை ஏற்படுத்தி, அவர்மேல் இன்னும் பல குற்றங்களைச் சாட்டி, குற்றத்தை மறுபடியும் உறுதிப்படுத்தினார்கள்.

நன்கு அறியப்பட்ட ஒரு அரசியல், பத்திரிகை நிருபர் எமிலி சோலா (Emile Zola) இதைக் குறித்துச் சொந்தமாகத் தன்னுடைய ஆராய்ச்சியை மேற்கொண்டார். இறுதியாக, பிரென்சு செய்தி தாளில் ஒரு கட்டுரையை எழுதினார். L'Aorore-வின் முதல் பக்கத்தில் இது காணப்பட்டது. ஆர்வமூட்டும் வகையில், இதற்காக ஆங்கில பெயர் - "விடியல்" (The Dawn) என்பதாகும். இந்தக் கட்டுரை, எங்குமுள்ள யூதர்களுக்கு முதன்மையாக பிரகாசிக்கும் நம்பிக்கையாக இருந்தது. இந்தக் கட்டுரை, திறக்கப்பட்ட ஒரு கடிதமாக பிரான்ஸ் ஜனாதிபதியிடம் அனுப்பப்பட்டு, யூதர்களுக்கு எதிராக பிரென்சு அரசாங்கங்கள் குற்றம் சாட்டப்பட்டது. இக்காரியமானது டிரெய்ஃபஸ், உடனே பிரான்சுக்குத் திரும்புமளவிற்குப் பொது ஜனங்களின் கூக்குரல் அதிகரித்தது.இரண்டுவருஷம் சிறையிருப்புக்குப்பின், அவர்மேல் சாட்டப்பட்டிருந்த குற்றம் ரத்து செய்யப்பட்டது.

### தியோடர் ஹெர்சல் (Theodor Herzl)

முதலாவது விசாரணையைப் பற்றிய தகவலையும் அதன் பின் விளைவுகளையும் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த தியோடர் ஹெர்சல் என்ற பத்திரிக்கையாளர் மூலம் இந்த விவகாரத்தில் நம்முடைய ஆண்டவரின் கரங்கள் கிரியை செய்வதைக் காணலாம். பாரிசில், டிரெய்ஙபசின் விசாரணையைத் தொடர்ந்து,

"யூதர்களுக்கு மரணம்" என்று ஜனக்கூட்டங்கள் கோஷம் இடுவதை ஹெர்சல் கண்டார். ஐரோப்பியாவில் யூதர்களுக்கு எதிரான சதிகள் என்றுமே வெளியேற்ற முடியாது என்றும், யூதர்கள் அனைவரும் ஐரோப்பாவை விட்டு வெளியேறி, தங்களுக்கென்ற நாட்டை ஏற்படுத்திக்கொள்வதைத் தவிர வேறு தீர்வில்லை என்றும் நம்பினார்.

1896-ஆம் வருடம் "The Jewish State" என்ற புத்தகத்தை எழுதினார். இந்தப் புத்தகம் யூத தாய் நாட்டிற்காகப் போர் செய்யக்கூடிய சீயோன் இயக்கத்திற்கு அடித்தளம் போடுவதற்கு வழி நடத்தியது. சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின் இஸ்ரயேல் தேசம் பிறந்தது.

"டிரெய்ஃபஸ் விவகாரம்" மற்றும் ஹெர்சல்மேல் அது ஏற்படுத்திய பாதிப்புகள் யூதர்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. வலுகட்டாயப்படுத்தப்பட்ட அடிமைத்தனம் முற்றுப்பெற்றது. அடுத்து, தேவ திட்டத்தின் பகுதி அதின் வடிவத்தை எடுத்துக்கொண்டிருந்தது. ஆனால் யூத எதிரிகளின் அமைப்பு தொடர்ந்தது. அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து வந்ததையும், இந்நாள் வரைக்கும தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கு எதிராக ஏற்பட்டிருக்கும் பகையையும் குறித்து விரிவாக விமர்சிக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைத் தடைசெய்வதற்கு, சாத்தான் இந்நாள் வரைக்கம் ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியைஅழிப்பதற்குமுயற்சித்துக் கொண்டிருக்கிறான்.

இஸ்ரயேல் தகுந்தபடி தண்டிக்கப்பட்டாலும், இதற்குக் காரணமாக இருந்த அனைவரும், அதற்கேற்ற விலையைச் செலுத்த வேண்டியதாக இருக்கும் என்று ஆண்டவர் கூறுகிறார். "பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான். இதோ, நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன்; அதினால் அவர்கள் தங்கள் அடிமைகளுக்குக் கொள்ளையாவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை அனுப்பினாரென்று அறிவீர்கள்." (சகரியா 2:8, 9)

இஸ்ரயேல் ஒரு தேசமாக திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படும் காலத்தில், நாம் வாழக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். அவர்கள் இயேசுவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அந்த நாள் மிக வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது. இஸ்ரயேலைக் குறித்துப் பேசப்படும்போதெல்லாம், "அவர்கள் என் கண்ணின் மணி" என்று தேவனால் பயன்படுத்தப்பட்ட அந்த நேசமான சொற்றொடரை தெரிவிப்போம். ஒரு தேசமாக, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்காக அவர்களைஆயத்தம்பண்ணும்படிக்கும் தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் முற்பிதாக்களோடு நிர்வாகிக்கவும் தேவன் அவர்களை வழிநடத்தி பாதுகாப்பார். (எரேமியா 31:31, 32)

ஒரு நவீன நாளின் அற்புதம்

# ஒரு தேசத்தின் மறுபிறப்பு



"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:14, 15)

இஸ்ரயேலின் தண்டனை காலம் முடிவை (1878) நோக்கி வரும்போது, தேவன் அவருடைய ஜனங்கள், வீடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைத் துவங்கினார். பாலஸ்தீனா, ஒட்டோமேன் சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் கீழ் இருந்தது. யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களை தேவன் அவருடைய வாக்குத்தத்தின்படி, குறித்த காலத்தில், எவ்வாறு அவர்களை வீடு கொண்டு வந்து சேர்ப்பார்? தேவன் அவருடைய ஜனங்கள் வீடு திரும்புவதற்கான செயல் முறைகளைத் துவங்குவதற்கு எவ்வாறு வாசலைத் திறந்தார் என்று சுருக்கமான விவரத்தைத் தொடர்ந்து காணலாம்.

**1840**

மேசியா வருவார் என்று 1840-ஆம் வருடம் சில கபாலியர்கள் (Kabbalists) கணக்கிட்டார்கள். ஆயரகணக்கான சாசிடம் (Chassidim) (கடுமையாக, பழங்கால யூத மார்க்கத்தைப் பின்பற்றக்கூடிய ஒரு பிரிவினர்) யூதர்கள், அவரை வரவேற்கும்படியாக, பரிசுத்த தேசத்திற்குக் குடிபெயர்ந்தார்கள். 1840-ஆம் வருடம் "இரத்தப் பழி" (யூதர்கள் கிறிஸ்தவ பிள்ளைகளைக் கடத்தி கொலை செய்து, யூதர்களின் விடுமுறைகளின்போது, அவர்களின் இரத்தத்தைச் சிலசடங்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதை இரத்தபழி என்று குற்றஞ்சாட்டப்பட்டது) என்ற குற்றச்சாட்டுகள், "தமஸ்கு விவகாரங்கள்" என்று அழைக்கப்பட்டதற்கு வழிநடத்தப்பட்டது. அது அவர்களை பாலஸ்தீனாவுக்கு விரட்டும் படி, சிரியா யூதர்களுக்கு மீண்டும் உபத்திரவத்தைக் கொண்டு வந்தது. (தமஸ்குவிலுள்ள யூதசமுதாயத்து அங்கத்தினர்களுக்கு எதிராக மத ரீதியான கொலைகளுக்காகக் குற்றம் சாட்டப்பட்ட சம்பவங்கள் 1840 -ஆம் வருடம் நடந்தது.)

**பொருளாதார வல்லமையோடு யூதர்கள்**

சில நேரங்களில், கர்த்தரின் கரம் சாதுரியமான வழிகளில் செயல்படுகிறது. மிகுந்த செல்வாக்கான யூதர்களின் திருமணங்களும் தொழில் சம்மந்தப்பட்ட விவகாரங்களும், பாலஸ்தீனாவில் துவக்க காலத்திலுள்ள யூதர்களின் வாழ்க்கையில் ஆழந்த பாதிப்புகளை ஏற்படுத்தியது. பழங்கால யூதரான மோசஸ் மாண்டிஃபோர், (Sir Moses Montefiore) தனுடைய இல்லத்தில் ஒரு யூத ஜெப ஆலயத்தையும், தனிப்பட்ட முறையில் ஒரு ஜோஹெட்டையும் (Shohet) (யூத மத குருக்களால், யூத பிரமாணத்தின்படி உணவுக்காக மிருகங்களைக் கொல்லுவதற்காக அங்கீகாரம் கொடுக்கப்பட்ட ஒரு நபர்) வைத்திருந்தார். இதினிமித்தம் அவர் எப்போதும் புசிப்பதற்கு யூத சடங்குகளின்படி மாம்ச உணவு கிடைத்தது. நாத்தன் (Nathan) மேயர் ரோத்ஸ்சைல்டு (Rothschild) அவருடைய மைத்துனனாக இருந்தார். இவர்கள் வங்கியில் வணீக பங்காளிகளாக இருந்தார்கள். இந்த மோசஸ் மாண்டிஃபோர், யூடித் கோஹென்னையம், (Judith Cohen) ரோத்சைல்டு அன்னா (Hannah) கோஹென்னையும் திருமணம் செய்தார்கள். இவர்கள் இருவரும் சகோதரிகள் இந்த இரண்டு மனுஷரும் யூதர்களின் உபத்திரவங்களைக் குறைக்க பாலஸ்தீனாவில் இடம்வாங்கினார்கள். பாலஸ்தீனாவில் கல்வி, உடல் நலம் மற்றும் தொழில் நுட்பங்களை விருத்தியடைச் செய்வதற்கு அதிகப்பட்சமான பணத்தை நன்கொடை அளித்தார்கள்.

தேவனுடைய மற்றொரு கிருபையை இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய பென்ஜமின் டிஸ்ரேய்லியில் (Disraeli) காணலாம். இவர் 40 வருடங்கள் மாண்டிஃபோரின் (Montefiore) பக்கத்து வீட்டில் வசித்து வந்தார். 95 பார்க் வீதியில் டிஸ்ரேய்லியும், 99 பார்க் வீதியில் மான்டிஃபோரும் வசித்து வந்தனர். பாலஸ்தீனாவுக்குப் பலமுறைகள் மாண்டிஃபோர் பயணித்தப்போது, அவரோடு டிஸ்ரேய்லியையும், சில பயணத்தில் அழைத்துச் சென்றார். இப்படியாக தேவன் உறவினர்களையும் - அயலகத்தாரையும், மைத்துனரையும், தொழில் பங்காளிகளையும் ஏற்பாடு செய்தார் - இவர்கள் யூத நன்கொடையாளிகளும், சீயோன் இயக்குனர்களுமாக இருந்தார்கள்.

1855-ஆம் வருடத்தில் மாண்டிஃபோர் ஜாபாவில் (Jaffa) உள்ள 250 ஏக்கர் நிலத்தை

விலைக்கு வாங்கினார். அருகாமையில் இருக்கும் யூதர்களுக்கு அவலர் எருசலேமின் பழைய பட்டணத்திற்கு வெளியே நிலங்களை வாங்கினார். 1881-ஆம் வருடத்திற்குள் 3300 ஏக்கர் நிலம் யூதர்களால் விலைக்கு வாங்கப்பட்டது. 1892-ஆம் வருடம் எட்மாண்ட் டி ரோதஸ்சாயில்டு (Edmonde de Rothschild) கோலானில் 3x80,000 ஏக்கர் நிலங்களை யூத குடியிருப்புக்காக வாங்கினார். அவர் 30 புதிய யூத நகரங்களையும், கிராமங்களையும் ஆதரித்தார்.

ஆனால் 1875 வருடத்தின் துவக்கத்தில், பால்கன் பெனின் சுலாவில் (Balkan Peninsula) (தீப கர்ப்பம்) கிறிஸ்துவ கலகத்திற்குப் பின்னும், அக்டோபரின் ஒட்டோமேன் வங்கி திவாலானதற்குப் பின்னும் 1878-ஆம் வருடம் பெர்லின் அமெரிக்க குடியரசின் சட்டசபைக்குப் பின்னும் அதிகபட்சமான யூதர்கள் வீடு திரும்பினார்கள்.

### கர்த்தருடைய அழைப்பு

### "என் ஜனங்களே, வீட்டிற்கு வாருங்கள்!"

**பெட்டா டிக்குவா** ("நம்பிக்கையின் வாசல்") பழங்கால யூதர்களால் 1878-ஆம் வருடம் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே முதல் நவீன யூத வேளாண்மையாக இருந்தது. இந்தப் பெயர் ஓசியா தீர்க்கதரிசனத்திலிருந்து எடுக்கப்பட்டது. ***"அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்" (***ஓசியா 2:15). துவக்கத்தில் குடியேறினவர்களிடம் அவர்களின் யூத பாரம்பரியத்தின் மத செல்வாக்கைக் காணலாம்.

**பெர்லினில் அமெரிக்க குடியிருப்பு சட்ட சபை** 1878-ஆம் ஆண்டு ஜூன் 13-ஆம் தேதியிலிருந்து ஜூலை 13-ஆம் தேதிவரை நடந்தது. ஒட்டோமேன் சாம்ராஜ்யத்தின்மேல் வெற்றி சிறந்த ரஷ்யா இராணுவத்தைத் தெடர்ந்து, பால்கன் பெனின்சுலாவிலுள்ள மாநகரங்களின் சட்டப்பூர்வமான எல்லைகளைத் தீர்மானிக்கக் கூட்டப்பட்டது. ஒட்டோமேன் சாம்ராஜ்யத்தில், நிலங்களை வாங்கவும், அதில் வசிக்கவும் யூதர்கள் அனுமதிக்கப்பட்ட காரியம், உலகப் பிரகாரமானப் பார்வையில் ஒரு சிறிய இலாபமாகத் தோன்றியது. இதில் பாலஸ்தீனும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தெய்வீக கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, ஒரு முக்கியமான வாய்ப்பென்னும் வாசல் திறக்கப்பட்டது. "சீயோனை நேசித்தவர்கள்" (Lovers of Zion/Hovevei Zion) மற்றும் (BILU) "யாக்கோபே, நாம் எழுந்துச் செல்லுவோம்" ஏசாயா 2:5. இயக்கங்கள் ரஷ்யா எங்கும் பரவி, யூதர்களை பாலஸ்தீனாவுக்குக் குடிபெயர்ந்துச் செல்லும்படி ஊக்குவித்தது.

**1881-ஆம் வருடம்** ரஷ்யாவின் இரண்டாம் சீஸர் அலெக்சாண்டர் கொல்லப்பட்டார், அதற்கு யூதர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இதன் விளைவாக, அதிகப்பட்சமான, யூத - எதிரான இயக்கங்கள் ரஷ்யா முழுவதும் பரவியது. முதல் Aliyah-வின்போது, 1881-1901 வருடத்திற்குள், ஏறக்குறைய 15,000 முதல் 25,000 யூதர்கள் பாலஸ்தீனாவுக்குக் குடிபெயர்ந்து. 28 காலனிகளை ஸ்தாபித்தார்கள். மீண்டுமாக குடிபெயர்ப்புக்கான மற்றொருவாசல் திறக்கப்பட்டதில் தேவனுடைய கரம் காணப்பட்டது.

**எபிரெய மொழி மீண்டும் உபயோகத்திற்கு வந்தது**. 1881-ஆம் வருடத்தில் எலியேசர் பென் - யெகூடா (Eliezer Ben-Yehuda) எருசலேமுக்குக் குடிபெயர்ந்தார். "Complete Dictionary of Ancient and Modern Hebrew" என்ற புத்தகத்தை, ஒரு நாளுக்கு 18 மணி நேரம் வேலை செய்து அதை எழுதினார். அவர் எழுதிய 17 தொகுப்புகளையும் 1959-ஆம் வருடம் அவருடைய குமாரன் வெளியிட்டார்.

**1896-ஆம் வருடம்** ஹெர்சல், "யூத நாடு" என்ற புத்தகத்தைவெளியிட்டார். முதல்சீயோன் இயக்கத்தின், குடியரசின் சட்டசபை 1897-ஆம் ஆண்டு கூடியது.

### பால்ஃபோர் பிரகடணம் மற்றும் அதைச் சுற்றியிருந்த அரசியல்

1914-ஆம் வருடம் புறஜாதிகளின் வல்லமை மடிவுக்கு வந்தது. அவர்கள் தங்களுடைய பரிசுத்த தேசத்திற்குப் போக வேண்டியதாக இருந்தது. 1917-ஆம் வருடத்தில் தலைநகரம் தற்காலிகமாக ஒட்டோமேன் சாம்ராஜ்யத்திலிருந்து பிரட்டன் சாம்ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டது.

### புறஜாதிகளின் புறப்படுதல் வாத்திய திரளோடு நடந்தேறியது

விரிவான ஒட்டோமேன் சாம்சராஜ்யமானது 7.6 மில்லியன் சதுர மைல்கள்கொண்ட தென் கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் வட ஆபிரிக்கா உட்பட மூன்று கண்டங்களை ஆக்கிரமித்திருந்தது. இப்போது, அந்த இராஜ்யம் நொருங்கியது. தேசப் பற்று மற்றும் பொது உடமை தத்துவத்தின் அதிகரிப்பும் ஒட்டோமேன் இராஜ்யத்தின் பல மாகாணங்களின் வழியாகத் தழுவிச் சென்றது. இளைஞர்களாக இருந்த துருக்கியர்கள்,

சுல்த்தானுக்கு எதிராகப் புரட்சி செய்து சீர்பொருந்தப்பட்ட சட்டங்களை 1839-1876-ஆம் வருடங்களுக்குள் ஸ்தாபித்து நம்பிக்கைக்குச் சுயாதீனத்தைக் கொண்டுவந்து, சட்டத்திற்கு முன் எல்லா பிரஜைகளையும் சமமாக நிறுத்தினார்கள். இளைய துருக்கியர்களின் புரட்சி (ஜூலை 3, 1908) 1876-ஆம் ஆண்டு சட்டத்தைச் சீர்ப்படுத்தி ஒட்டோமேன் சாம்ராஜ்யத்தைக் கலைத்துவிட்டது.

### பிரபு ஆர்த்தர் ஜேம்ஸ் பால்ஃபோர் மற்றும் சேய்ம் வெய்ஸ்மேன்

வெய்ஸ்மேன் ஒரு (biochemist) வேதிய ஆராய்ச்சி நிபுணர் என்றும், யுத்த ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அசிட்டோனை (acetone) உண்டாக்கினார் என்ற காரியம் பொதுவாக அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாகும். பால்ஃபோர் பிரகடனத்திற்குவழிநடத்துவதற்கு, இது தேவனுடையமற்றொருசாதுரியமான வழிநடத்துதலாக இருந்தது. கிரேட் பிரிட்டன் முதலாம் உலகப் போரில் வெற்றியடையச் செய்வதற்கு வெய்ஸ்மேனின் கண்டுபிடிப்பு உதவியாக இருந்தது. அவருடைய பங்களிப்பின் முக்கியத்துவமானது, பிரிட்டிஷ் அரசாங்கத்தில் வெய்ஸ்மேனுக்கு ஒரு சலுகை அளிக்கப்பட்டது. மேலும் அவருடைய சீயோன் இயக்கத்தின் விருப்பங்கள் அனைத்தையும், மந்திரி சபையின் உயர் பதவியிலுள்ள ஒரு அங்கத்தினரிடம் தெரிவிப்பதற்கு இது அவரை வழி நடத்தியது.

வெய்ஸ்மேன் பெற்றிருந்த செல்வாக்கின் வழியாக, அயல்நாட்டு காரியதரிசியாகிய ஆர்த்தர் பால்ஃபோர், யூத தாய்நாடு வேண்டும் என்ற கோரும் வெய்ஸ்மேனின் கருத்தை ஆதரிக்கும் வகையில் பால்ஃபோர் பிரகடணத்தை வெளியிட்டார். வெய்ஸ்மேன் மற்றும் பால்ஃபோருக்குமுள்ள தொடர்பைப் பற்றி சரியாகத் தெரியவில்லை.

"சீயோனை நேசிக்கும்" வைராக்கியமுள்ள செய்ம் வெய்ஸ்மேன், ரஷ்யாவில் எல்லைப் பகுதிகளில் வளர்ந்தார். அதற்குப்பின் அவர் இங்கிலாந்துக்குச் சென்றார். பேரார்வத்தினால், பால்ஃபோர், வெய்ஸ்மேனோடு 15 நிமிடங்கள் சந்திப்பதற்கு அனுமதி கேட்டார். அவர்களின் சந்திப்பு ஒரு மணி நேரம் நீடித்தது. பால்ஃபோர் ஒரு கிறிஸ்துவ சீயோன் இயக்க அங்கத்தினராக மாறினார். அவருடைய மரணப்படுக்கையில், அவருடைய நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் அவருடைய நண்பரான செய்ம் வெய்ஸ்மேனை மட்டுமே தன்னைப்பார்க்க அனுமதித்தார். முடிவு வரையிலும் இவர்கள் நண்பர்களாக இருந்தனர்.

1917-ஆம் வருடம், நவம்பர் 2-ஆம் தேதி பால்ஃபோர் பிரகடனத்தைப் பூர்த்தி செய்வதற்குச், சரியானநேரத்தில்,தேவனுடையகரம் இவர்களின் சந்திப்பை ஏற்பாடுசெய்தது. பாலஸ்தீனாவின்மேல் இங்கிலாந்து ஆளுகைப் பெற்றது.

ஐந்து நாட்களுக்குப் பின், 1917-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் தேதி அன்று ரஷ்யாவுக்குள் போல்ஷிவிக் (Bolshevik) புரட்சி வெடித்து, யூத ஜனங்களை ரஷ்யாவுக்குள் வைத்து அடைத்தார்கள். ஆனால் பால்ஃபோர் பிரகடனத்தைத் தடுக்க இயலாதபடிக்கு இந்தப் புரட்சி ஐந்து நாட்கள் தாமதாகத் துவங்கியது. பாலஸ்தீனாவை மகிமையாக ஆட்சி செய்து வந்த புறஜாதியார் இடிந்து போனார்கள். ஆனால் பால்ஃபோர் பிரகடனம், பாலஸ்தீனாவில் தாவீதின் நட்சத்திரத்தை ஏற்றி வைத்தது.

பால்ஃபோர் பிரகடனமே 1948 ஆம் வருடத்திற்கு முன் துவங்கிய சீயோன் இயக்குநர்களின் மிகச் சிறப்பான ஒரே சாதனை என்று வெய்ஸ்மேன் கருதினார், பால்ஃபோர் பிரகடனம் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த ChurchillWhite paper (ஜூன் 3, 1922) மற்றும் 1922 ஆம் வருடம் பாலஸ்தீனாவுக்காக ஐக்கிய தேசிய குழு போட்ட சட்டங்கள் போன்ற சட்டரீதியான காரியங்கள் அனைத்துமே சீயோன் இயக்கத்திற்கான நிறைவேற்றமாகும்,

### முதலாம் உலகப் போர் மற்றும் இஸ்ரயேலின் பிறப்பு

முதலாம் உலகப் போரானது, 9 மில்லியன் யுத்த வீரர்களையும், 7 மில்லியன் இராணுவத்தைச் சேராத உயர் அதிகாரிகளைக் கொன்றது. இதுவரையில் நடந்தபோர்களில் இது மிகக் கொடூரமானதாக இருந்தது. 1919-ஆம் வருடத்தில் திறமை வாய்ந்த ஒரு சமாதான ஒப்பந்தத்தினால் (Treaty of Versaiies) அந்த யுத்தம் நிறுத்தப்பட்டது. பெரிதளவில் அரசியலில் மாற்றங்களும் புரட்சிகளும் ஏற்பட்டது. நான்கு வல்லமையான சாம்ராஜ்யங்கள் அழிந்தது. ஜெர்மன், ரஷ்யா ஆஸ்டிரோ ஹங்கேரி மற்றும் ஒட்டோமேன் ஒழிந்தது. ஆட்சிசெய்து வந்த ஒட்டோமேன் சாம்ராஜ்யம், 1923-ஆம் வருடம் ஜூலை 24-ஆம் தேதி லாயுசேன் (Lausanne) ஒப்பந்தத்தோடு முடிவடைந்தது. அதைத் துருக்கியின் குடியரசு மேற்கொண்டது.

ஒட்டோமேன் சாம்ராஜ்யத்தின் எல்லைகளிலிருந்து நாற்பது புதிய நாடுகள் உருவாக்கப்பட்டது. 5.4 மில்லியன் சதுர மைல்களைக்கொண்ட 22 மாநிலங்களின்மேல் அரபியர்கள் அதிகாரம் பெற்றார்கள். பாலஸ்தீனாவிலுள்ள இந்த எல்லைகளில் யூதர்கள் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகப் பெற்றார்கள். வெஸ்ட்டு

பாங்க்கை, அரபு எமிரேட்ஸ்க்குக் (of Transjordan)கொடுத்தபோது மேலும் 77% யூதர்களின் நிலங்கள் குறைந்தது. மீதியிருக்கும் 23% யூதர்களுக்குத் தாய்நாடாகக் கொடுப்பதற்குக் கட்டளையை ஆயத்தம் செய்யும்படி 1922-ஆம் வருடம் தேசங்களின் கூட்டமைப்பு பிரட்டனுக்கு உத்தரவளித்தது. அதற்குப் பின் 1923-ஆம் வருடம் கோலன் குன்றுகள், பிரென்ச் நாட்டிற்குக் கொடுக்கப்பட்டது. ( League's Mandate for Syria.)

### பிரிட்டிஷ் சட்டம்

அந்தப் பகுதியைக் கட்டுப்படுத்திக்கொள்ள, 1922-ஆம் வருஷம் ஜூன் மாதம், பிரிட்டிஷ், தேசிய கூட்டமைப்பிலிருந்து அதிகாரம் பெற்றது. "அவர்கள் தனியாக நிற்பதற்கான காலம் வரும் வரையில்" ஒட்டோமேன் சாமராஜ்யத்தின் பகுதியை நிர்வகிப்பதற்கு இந்தச் சட்டம் அமைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் சட்டத்தின்போது, பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களும் அரபியர்களும், ஒருவரோடொருவர் மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளிடமும் சண்டைப்போட்டுக்கொண்டிருந்தனர். இது 1936-1939 வருடங்கள் அரபியர்கள் புரட்சியாக உருவானது. அதைத் தொடர்ந்து 1947-1948-ஆம் வருடம் உள்நாட்டு கலகமும், 1948-ஆம் வருடம் அரபு-இஸ்ரயேல் யுத்தமும் நடந்தது. 1949-ஆம் வருடம் cease-fire ஒப்பந்தம், முன்னதாக இருந்த பாலஸ்தீன சட்டத்திலிருந்து, இஸ்ரயேலின் புதிய மாநிலத்திலிருந்து பிரித்தது. ஜோர்டான் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட வெஸ்ட் பாங்க் மற்றும் அரபு அல்-பாலஸ்தீன அரசாங்கங்கள் காசா பகுதியை எகிப்துக்குக் கீழ்க் கொண்டுவந்தது.

உலகளாவிய யூதர்களுக்கு முதலாம் உலகப் போரும் ஒரு திருப்பு முனையாக இருந்தது. ஜெர்மனியிலும் கிழக்கத்திய ஐரோப்பாவிலும் யூதர்கள்மேல் பகை அதிகரித்தது. ஜெர்மானிய யூதர்கள் துரோகிகளாக எண்ணப்பட்டார்கள். ரஷ்ய யூதர்கள் எதிராளிகளோடு கூட்டமைப்பு வைத்திருப்பதாக சந்தேகப்பட்டு 600,000 பேர் ரஷ்யாவிலிருந்து நாடுகடத்தப்பட்டார்கள். அக்டோபர் 1917-ஆம் ஆண்டு ஏற்பட்ட போல்ஷிவிக் (Bolshevik) புரட்சிக்கு, யூதத் தலைவர் காரல் மார்க்ஸ் (Karl Marx) மற்றும் மந்திரி கூட்டத்தின் ஏழு பேர்களில் நான்கு யூதர்களும் (டிரோட்ஸ்கி, (Trotsky) சிநோவிவ், (Zinoviev) காமென்னிவ் (Kamenev) மற்றும் சிவர்டுலோவ் (Sverdlov) காரணம் யூதர்கள் குற்றம் சாட்டப்பட்டார்கள். இதன் விளைவாக ஏறக்குறை 100,000 யூதர்கள் உக்கிரேனியர்கள், (Ukrainians) போலர்கள் (Poles)மற்றும் ரஷ்யர்களால் கொல்லப்பட்டார்கள். முதலாம் உலகப் போரின்போது ஒரு யூத குடிபெயர்ப்பு படிப்படியாகக் குறைந்தது. ஆனால் அந்த யுத்தம் முடிவடைந்தது. ஆயரக்கணக்கான யூதர்கள் ஐரோப்பாவை விட்டு புறப்பட துவங்கினார்கள்.

### இரண்டாம் உலகப் போரால், இஸ்ரயேலின் பிறப்பின் மேல் ஏற்பட்ட பாதிப்புகள்

இரண்டாம் உலகப் போரில் 30 நாடுகளிலிருந்து, 100 மில்லியன் ஜனங்கள் பங்கெடுத்த மனித வரலாற்றில் ஒரு கொடூரமான சண்டையாக இருந்தது. ஒரே இனத்தார் பூண்டுடன் அழிக்கப்படுதல், இரக்கமற்றப் படுகொலை, வியாதிகள், பஞ்சம், பட்டினி, பேராபத்துக்கள் வழியாக கும்பல் கும்பலாக அழிக்கப்பட்டதே இந்த யுத்தத்திற்குக் குறிப்பிடக்கூடிய ஒரு காரியமாக உள்ளது. ஜப்பானில், தொழில் நுட்பம் மற்றும் ஜனத்தொகை அதிகமாக உள்ள இடங்களில் இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டு, 60 மில்லியன் ஜனங்கள் உயிர் இழந்தார்கள்.

இரண்டாம் உலகப் போர் 1939-ஆம் வருடம், செப்டம்பர் மாதம் 1-ஆம் தேதி அன்று ஜெர்மனி, போலாந்தைத் தாக்கியதோடு துவங்கி, அதன் விளைவாக, ஜெர்மனி, பிரான்ஸோடும், இங்கிலாந்தோடும் போர் தொடுத்தது. 1939-ஆம் வருடத்தின் இறுதி முதல் 1941-ஆம் வருடம் துவக்கம் வரை, ஐரோப்பாவின் பல நாடுகளை ஜெர்மனி கைப்பற்றி இத்தாலி மற்றும் ஜப்பானோடும் கூட்டணியை உருவாக்கியது.

### பேரழிவு

"இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத்துரத்திவிட்டஎல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்; அதற்குப் பின்பு வேட்டைக்காரராகியஅநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லாக் குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்." (எரேமியா 16:15, 16)

யூதர்களைத் தங்களுடைய தாய்நாட்டில் கூட்டிச்சேர்க்கக்கூடிய சீயோன் இயக்கத்தை, "மீன் பிடித்தல்" என்ற வார்த்தை விவரிக்கிறது. உபத்திரவத்தினால் வலுக்கட்டாயமாக யூதர்களை

வீடு திரும்பச் செய்வதை "வேட்டை ஆடுவது" என்ற வார்த்தை விவரிக்கிறது. ஐரோப்பாவில் யூதர்களைத் தொடர்ந்து எதிர்த்ததின் விளைவாக 19-ஆம் நூற்றாண்டில், மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில், ஒரு தேசிய மறுமலர்ச்சி இயக்கமாக, சீயோன் இயக்கம் துவங்கப்பட்டது. தியோடர் ஹெர்சல், சீயோன் இயக்கத்தின் நிர்வாகியாகக் கருதப்படுகிறார். 1896-ஆம் வருடம் Der judenstaat (யூத நாடு) என்ற அவர் எழுதின புத்தகத்தில், 20-ஆம் நூற்றாண்டில், வருங்கால சுதந்தரமான யூத நாட்டை ஸ்தாபிப்பதாகக் காட்சி கண்டதாக எழுதினார். இந்த இயக்கத்தின் அநேக தலைவர்கள் பாலஸ்தீனாவை விரும்பிய ஒரு நாடாக உருவாக்குவதையும், தங்களுடைய முக்கியமாக இலக்காகக் கொண்டார்கள். இந்த இயக்கம் துரிதமாக வளர்ச்சியடைந்து, யூத அரசியலை அதிகாரமுள்ள ஒரு வல்லமையாக உருவாக்கி, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் வேரூன்றியிருந்த யூத வாழ்க்கையை அழித்தது.

ஹோலோகாஸ்ட் (Holocaust) என்பது ஒரு கிரேக்க வார்த்தையாகும். இதற்குச் "சுட்டெரித்தல்" என்று பொருள். எபிரெய வார்த்தையில் ஷோஆ (Shoah) என்று அழைக்கப்படுகிறது. இதற்குப் "பேரழிவு" என்று அர்த்தம். இது தேவனுடைய திட்டத்தைத் தடை செய்வதற்கும், யூதர்களை அழிப்பதற்கும் கொடூரமான முயற்சியாக இருந்தது. 1933 மற்றும் 1945-ஆம் வருடங்களுக்கு இடையில், ஜெர்மானியாவில் நாசிப் படை, சுமார் 20,000 உழைப்பாளிகள், மரணம் மற்றும் அரசாங்கச் சிறைகளை ஸ்தாபித்தது. கணக்கிட்டப்படி அந்த இடத்தில் 10 மில்லியன் ஜனங்கள் மரித்தார்கள். அதில் பெரும்பாலானோர் யூதர்கள்.

### சுதந்தரத்திற்காக இஸ்ரயேலின் போர்

பழங்கால பகுதியில் 1948-ஆம் வருடம் இஸ்ரயேலின் மறுபிறப்பு ஒரு அதிசயமாக இருந்தது. 1948-ஆம் வருடம் மே மாதம் 14-ஆம் தேதி, இறுதியான பிரிட்டிஷ் படைகள் ஹாய்ஃபாவை (Haifa) விட்டு வெளியேறியது. யூத ஜனத்தின் சட்டமைப்புக் குழு, இஸ்ரயேல் தேசம் ஸ்தாபிக்கப்படுவதைப் பகிரங்கமாக அறிவித்தது. பேரழிவின் சாம்பலிலிருந்து ஒரே நாளில் பிறந்த இஸ்ரயேல் தேசத்தை, லெபனான், சிரியா, ஈராக்கு, சௌதி அரேபியா, எகிப்து மற்றும் ஜோர்டானின் படைவீரர்கள், "யூதர்களைக் கடலிலே தள்ளி விடுவோம்" என்று சபதம் எடுத்துக்கொண்டு அவர்களைத் தாக்கினர். "அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள்" (சங்கீதம் 83:4) என்று இஸ்ரயேலின் எதிரிகள் தீர்க்கதரிசனமாகச் சொல்லக்கூடிய வார்த்தைகளுக்கு, மேற்கூறப்பட்ட வார்த்தைகள் எவ்வளவு தெளிவாகப் பொருந்துகிறது.

எகிப்தியர்களிடம் மட்டுமே, 40,000 போர் வீரர்களும், 135 டேங்க்குகளும், கனமான துப்பாக்கிகளும், விமானப் படையில் 60 போர் விமானங்களும் இருந்தன. ஆயினும், எல்லா வல்லமைகளையும் எதிர்த்து இஸ்ரயேல் தப்பிப் பிழைத்து வெற்றி அடைந்தது. இஸ்ரயேலுக்குக் கால் நடை வீரர்கள் இல்லாத போதிலும், பிரிட்டிஷாரை எதிர்த்த கொரில்லா குழுவினர் மற்றும் யூத படையணி வழியாகவும் சில இராணுவ வல்லமை இருந்தது.

இவர்கள் இரண்டாம் உலகப் போரில் இராணுவப் பயிற்சியையும் அனுபவங்களையும் பெற்று பிரட்டனுக்காக போரிட்ட யூத போர் வீரர்கள். இஸ்ரயேலின் இராணுவம் உருவாவதற்கு இவர்களே உட்கருவானார்கள். இஸ்ரயேலில் நடந்த இந்தச் சம்பவங்களில் ஆண்டவரே நிச்சயமாகத் தலையிட்டு, அளவுகடந்த எதிர்ப்புகளை எதிர்த்து வெற்றியடையச் செய்திருக்க வேண்டும்.

யுத்தம் 1949-ஆம் வருடம் நிறைவடையும்போது, பாலஸ்தீனிய அரபியர்களுக்காக, ஐக்கிய நாடுகள் ஒதுக்கி வைத்திருந்த வெஸ்ட் பாங்க் மற்றும் வட-பாலஸ்தீனாவை இஸ்ரயேல் கைப்பற்றியது. ஜோர்டான் மீதியுள்ள வெஸ்ட் பாங்கையும் கிழக்கு எருசலேமையும் கைப்பற்றியது. அதே நேரத்தில் பாலஸ்தீனிய அரபியர்களுக்காக ஐக்கிய நாடு ஒதுக்கி வைத்திருந்த காசா பகுதியை எகிப்து பிடித்தது.

### 1956-ஆம் வருடம் நடந்த யுத்தம்

"இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன்; எருசலேமுக்கு விரோதமாய்ப் போடப்படும் முற்றிகையிலே யூதாவும் அப்படியேயாகும். அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்." (சகரியா 12:2, 3)

இஸ்ரயேல், எகிப்து, ஜோர்டான், லெபனான் மற்றும் சிரியா தேசங்களுக்கிடையில் 1948-ஆம் வருடத்தின் கோடை காலத்திற்குள் ஆமிஸ்டிக் (armistice) ஒப்பந்தத்திற்குப் பேச்சு வார்த்தைகள் நடந்தது. ஆயினும் எகிப்து இஸ்ரயேலோடு போர் புரியும் மனப்பான்மையோடே இருந்தது. அதன்

விளைவாக இஸ்ரயேலின் கப்பல்கள் உள்ளே நுழையாதபடிக்கு சூயஸ் கால்வாயை அவைகளுக்கு அடைத்து வைத்திருந்தது. 1955-ஆம் வருடத்தில், இஸ்ரயேலோடு போர் தொடுக்கும் நோக்கத்தோடு, எகிப்தின் ஜனாதிபதி கமால் ஆட்பெல் நாசர் (Gamal Adbel Nasser) ரஷ்யாவிலிருந்து போர் ஆயுதங்களை வாங்கத் துவங்கினான். இந்தப் பகையுணர்வு விரிவடைந்து, டீரானின் (Tiran) ஜலசந்தியை முற்றுகையிட்டது. இரண்டு வாரங்களுக்குள் நாசரை மூன்று படைகளுக்குத் தலைமையாக வைத்து சிரியா மற்றும் ஜோர்டானுடன் எகிப்து ஒரு ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டது.

இஸ்ரயேலின் கப்பல் போக்குவரவைத் தொடர்ந்து சூயஸ் கால்வாய் மற்றும் கல்ஃப் ஆப் அக்குவாபாவை (Gulf of Aqaba) மூடிவைத் திருந்ததன் விளைவாகவும், தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்ததன் விளைவாகவும், 1956-ஆம் வருடம் அக்டோபர் 29-ஆம் தேதி இஸ்ரயேல் எகிப்தை தாக்கும்படி அதிகமாகத் தூண்டப்பட்டது. இஸ்ரயேலின் படைகள் எகிப்தியரை முறியடித்து, சீனாய் தீபகற்பம் (Sinai Peninsula) முழுவதையும் கைப்பற்றியது. இந்த நடவடிக்கைக்கு 100 மணி நேரம் மட்டுமே செலவிடப்பட்டது. சிவந்த சமுத்திரத்தோடு, காசா பகுதி மற்றும் ஷார்ம் அல்-ஷேயிக்கையும் (Sharm al-Sheikh) இஸ்ரயேல் கைப்பற்றியது. அமெரிக்கா கொடுத்த அழுத்தத்தினால், எகிப்தியரிடமிருந்து கைப்பற்றின இடங்களை எந்தவிதமான சலுகைளுமின்றி (concessions) வெளியேறினார்கள். இது 1967-ஆம் வருடம் நடந்த யுதத்திற்கு விதைகளைத் தூவியது.

### ஆறு நாள் போர்

**எகிப்து:** "பாலஸ்தீனா ஜனங்களின் உரிமைகளை முழுமையாகத் திரும்பக் கொடுப்பதே எங்களது நோக்கம். மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், இஸ்ரயேல் தேசத்தை முற்றிலுமாக அழிப்பதே எங்கள் குறிக்கோள். உடனடியான இலக்கு: அரபு இராணுவ வல்லமை முழு வளர்ச்சியடைதல். தேசிய இலக்கு: இஸ்ரயேலை வேரோடு பிடுங்குதல்." - எகிப்தின் ஜனாதிபதி நாசர், 1965, நவம்பர் 18-ஆம் தேதி.

இஸ்ரயேலின்மேல், தீவிரவாத தாக்குதல் களைத் தடுப்பதற்கு, ஐக்கிய நாடுகளின், சமாதான படைகள் உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையில், இஸ்ரயேல் 1956-ஆம் வருடம் நடந்த யுத்தத்தில், சீனாயிலிருந்து பின் வாங்கியது. மேற்கொண்டு போர் நிறுத்தம் ஒப்பந்தமாக, சிவந்த சமுத்திரம் மற்றும் கல்ப் ஆப் அக்குபாவை (Gulf of Aqaba) இணைக்கும் கால்வாயை சர்வதேசிய வழியாகவும் கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இஸ்ரயேலுக்கு டீரானின் (Tiran) கால்வாய் மட்டுமே தென்திசையில் இயலாட் (Eilat) துறைமுகத்திருந்து வெளியே வருவதற்கான ஒரே வழியாகும்.

1967-ஆம் வருடம், மே 17-ஆம் தேதி, சீனாயில் நின்ற ஐக்கிய சமாதானப் படைகளை உடனடியாக பின்வாங்கும்படி நாசர் அதிகாரத்துடன் கேட்டான். 24 மணி நேரத்திற்குள் காரிய நிர்வாக தளபதி யூ தாண்டு (Secretary General U Thant) இதற்கு இணங்கி, எகிப்திய படைகள் மீண்டுமாக சீனாயில் நுழையும் வரையில், இஸ்ரயேலுக்கு எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்காமலிருந்தான்.

இஸ்ரயேலின் தென் திசையில், நாசர் சுமார் 100,000 போர் வீரர்களையும், 950 டாங்க்குகளையும், 1000 பீரங்கிகளையும் பரவலாக நிறுத்தினான். மே 23-ஆம் தேதி, டீரான் (Tiran) கால்வாயை அடைப்பதற்காக அறிவித்தான்.

இஸ்ரயேலின் வட திசையில், சிரியா 75,000 படைவீரர்களையும் பீரங்கிகளையும், கோலான் குன்றுகளின்மேல் கவசமிட்ட படை வீரர்களையும் நிறுத்தியது.

இஸ்ரயேலின் கிழக்கில், ஜோர்டான் ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை, எகிப்தோடும், ஐக்கிய அரபு தேசங்களோடும் செய்துகொண்டு, 55,000 படை வீரர்களையும், 300 டாங்க்குகளையும் எல்லையில் நிறுத்தியது. ஜோர்டானின் அழைப்பிற்கு இணங்க, ஈராக் படைகள், 100 டாங்க்குகளையும் 200 போர் விமானங்கள் மற்றும் போரிடுவதற்குக் காலாட் படைகளையும் அனுப்பியது.

### திட்டத்தின் மையம்

இஸ்ரயேல் படைகள் இரண்டில் ஒரு பங்காக எண்ணிக்கையில் குறைந்தார்கள். மற்றும் டாங்க்குகள் மற்றும் போர் விமானங்களிலும் மூன்றுக்கு ஒன்றாகக் குறைந்திருந்தார்கள். சுற்றி வளைக்கப்பட்டு எண்ணிக்கையில் குறைந்திருந்ததாலும், தேர்வு செய்வதற்கு வாய்ப்பில்லாமல், வெகு சீக்கிரத்தில், தெளிவான வெற்றியைத் தீர்மானிப்பதே அவர்களின் நோக்கமாயிருந்தது. அமெரிக்காவிடமிருந்து வந்த சிறிதளவான உதவியையும்கூட, வியட்நாம் தடுத்துவிட்டது. நீண்ட கால தடை, இஸ்ரயேல்மேலும் செயல்படாதபடிக்கு அவர்களின் பொருளாதாரம் நெருக்கப்பட்டதினால், அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருந்தது.

1967-ஆம் வருடம் ஜூன் 5-ஆம் தேதி காலையில் மைய திட்டம் துவக்கப்பட்டது. பல எகிப்து விமானங்கள் தரையில் இருக்க,

ஆச்சரியமூட்டும் வகையில், எகிப்தியர் எதிர்பாராத நேரத்தில், இஸ்ரயேலின் விமானங்கள், மத்திய தரைக் கடலின் மேல் சென்றதினால், முதன்மையாக இந்த வேலை நிறைவேற்றப்பட்டது. அடுத்தடுத்து இஸ்ரயேலர்கள் எகிப்தைத் தாக்கியதால், 338 எகிப்தின் போர் விமானங்கள் அழிக்கப்பட்டது. எகிப்திய ரேடார்களையும், (radar) தரையிலிருந்தே தாக்கக்கூடிய ஏவுகணைகளையும் அழித்தது. இஸ்ரயேலர்கள் 19 போர் விமானங்களை மட்டுமே இழந்தார்கள்.

ஆகாயத்தில் நடத்தப்பட்ட இந்த யுத்தத்தில் கிடைத்த வெற்றியில் மிகப் பெரிய அழிவு ஏற்பட்டதால், ஐரோப்பாவில் ஒருவரும் இதை நம்பவில்லை. இஸ்ரயேலின் 70 விமானங்கள் அழிக்கப்பட்டது என்ற தவறான செய்தியைத் தொடர்ந்து எகிப்து வெளியிட்டது.

வடக்கில், சிரியா மற்றும் ஜோர்டானோடு கடுமையான யுத்தம் நடந்தது. இதன் விளைவாக, ஜோர்டானின் விமானப் படை முழுவதும், சிரியாவின் 2/3 விமானப் படையும் அழிக்கப்பட்டது. அரபியர்களால் தவறாகக் கோரப்பட்ட வெற்றியினால், சீஸ் ∴பையர் (cease-fire) வலியுறுத்தும்படிக்கு, ரஷியர்கள் ஐக்கிய நாடுகளுக்குச் செல்வது தாமதமானது. இதன் விளைவாக இஸ்ரயேல் தன்னுடைய படைகளை எகிப்திலிருந்து ஜோர்டானுக்கும் சிரியாவுக்கும் திரும்பிச் செல்ல நேரம் கிடைத்தது.

ஜூன் மாதம் 11-ஆம் தேதி சீஸ் பையர் (cease-fire) என்ற ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 20,000 அரபு வீரர்கள் கொல்லப்பட்டார்கள். அதே நேரத்தில் 1000 பேர்களுக்குக் குறைவான இஸ்ரயேலர்கள் தங்களுடைய ஜீவனை இழந்தார்கள். இஸ்ரயேலை முற்றிலுமாக அழிக்க வேண்டுமென்ற அரபியர்களின் பேராசையின் விளைவாக காசா பகுதியையும், சீனாய் தீபகற்பம் முழுவதையும், வெஸ்ட் பேங்க்கையும் கிழக்கு எருசலேம் மற்றும் கோலான் குன்றுகளையும் இஸ்ரயேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. குறிப்பாக தேசத்தின் பாதுகாப்புப் படைகள் அதிகரிக்கும் வகையில் இந்த யுத்தத்தின் விளைவாக இஸ்ரயேலின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் இடம் மூன்று மடங்காகப் பெருகியது. தேவன் தம்முடைய ஜனங்களைப் பாதுகாக்கும்போது அவருடைய கரம் குறுகுவதில்லை

**தேவனுடைய விரல்**

அந்த நேரடியான மூன்று மணி நேரத்தில் நடந்த உண்மையை குறித்து IDF தலைமை தளபதியாகிய ஈஸர் வெய்ஸ்மேன் (Ezer Weizman), விழுந்துபோன விமான ஓட்டுனரின் தந்தை கேட்டார். இஸ்ரயேலின் போர் விமானங்கள் ஒவ்வொரு எகிப்திய போர் விமானங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக அழித்தபோதிலும், இப்படியாக தங்களுடைய சொந்த விமானங்கள், தொடர்ந்து தாக்கப்படுவதை எகிப்தியர்கள் அவர்களுடைய விமான படையினருக்கு முன்னதாக அறிவிக்க வில்லை.

பின்பு, இஸ்ரயேல் தேசத்திற்கு ஜனாதிபதியாகப் பணி புரிந்த ஈஸர் வெய்ஸ்மேன் அமைதியாக இருந்தார். அதற்குப் பின் தன் தலையை உயர்த்தி, "இது தேவனுடைய விரல்" என்று கூறினார்.

இஸ்ரயேல் மறுபடியும் பிறப்பதற்காக வழிநடத்தப்பட்ட ஒவ்வொரு சம்பவமும், இயற்கையானகோணத்திலிருந்து விவரிக்கப்படலாம். ஆயினும், தேவனுடைய திட்டத்தையும் இஸ்ரயேலுக்காக ஏற்படுத்தின அவருடைய வாக்குத்தத்தத்தையும் புரிந்துகொள்ளும்போது, மெய்யான வெளிச்சத்தில், இவைகளை நாம் காணலாம். பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்காக, ஒரு தேசத்தை மறுபடியும் உருவாக்கக்கூடிய தேவனுடைய நோக்கத்தை நேரடியாக நிறைவேற்றக் கூடியவைகளாக இருக்கிறது. உண்மையில் இந்தச் சம்பவங்கள் நவீன நாளின் அற்புதங்களே!

# இன்றைய உலகத்திற்கு இஸ்ரயேலின் பங்களிப்பு



"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்." (ஆதியாகமம் 12:2)

தொழில் நுட்பம் புதுமையான சுற்றுப்புறங்களில் காணப்படும் புதிதான கண்டுபிடிப்புகள், மருத்துவ கண்டுபிடிப்புகள் மற்றும் மனித நேய உதவிகளின் வழியாக, இன்றைய உலகத்திற்கு மிகப் பிரபலமான பங்களிப்பை இஸ்ரயேல் கொடுத்திருக்கிறது. இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை விஸ்தரிக்குமளவுக்கு தேவையான விசுவாசத்தை கிறிஸ்துவின்மேல் கொண்டிராமல் போனாலும், இப்படிப்பட்ட சிலாக்கியத்தை கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கீழ்ப் பெறுவதற்காக ஆயத்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பல தலைமுறைகளால் நியாயப்பிரமாணத்தைத் தங்களுடைய பரம்பரைச் சொத்தாகக் கொண்டிருந்த இஸ்ரயேல், அதிகமான மனித நேயத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் தொடர்ந்து அளிக்கும் சில பங்களிப்புகளைக் காணலாம்.

### நோபல் பரிசுகள்

வேதியியல், பொருளாதாரம், இலக்கியம், சமாதானம், பௌதீக சாஸ்திரம் மற்றும் மருத்துவத்தில், முக்கியமான பங்களிப்புகளைச் செய்தவர்களைக் கௌரவிக்கும்படி கொடுக்கப்படும் சிறந்த சர்வதேசிய பரிசு இந்த நோபல் பரிசாகும்.

1901 முதல் 2014-ஆம் வருடம் வரைக்கும் 855 பேர்கள் வெற்றியடைந்து நோபல் பரிசைப் பெற்றார்கள். அதில் 194 பேர்கள் (23%) யூதர்கள். தற்போது உலக ஜனத்தொகையைப் பார்க்கும்போது இவர்கள் 0.2 % மட்டுமே உள்ளார்கள். (500:1)

### விஞ்ஞான ஆராய்ச்சி

விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னணியில், இஸ்ரயேலின் உயர்-நுட்ப கண்டுபிடிப்புகள் தேசங்கள் மத்தியில் மிகவும் மேன்மையாக உள்ளது.

உலகத்திலுள்ள மற்ற தேசங்களைக் காட்டிலும், இஸ்ரயேலிடம் அதிகமான விஞ்ஞானிகள், தொழில் நுட்பவல்லுனர்கள் மற்றும் பொறியாளர்களோடு 10,000 பேருக்கு 140 தொழிலாளிகளையும் பெற்றிருக்கிறார்கள். அமெரிக்காவிடம் 10,000 பேருக்கு 85 பேர் இருக்கிறார்கள். கலிபோர்னியாவின் (California) சிலிக்கான் பள்ளத்தாக்குக்கு அடுத்து இஸ்ரயேலிலுள்ள "சிலிக்கான் வாடியில்" (Silicon Wadi) தான் உயர்-தர தொழில்நுட்ப தொழிற்சாலைகள் உள்ளது. இஸ்ரயேலிலிருந்து வந்த சில புதிதான கண்டுபிடிப்புகளைக் காணலாம்.

### இஸ்ரயேலின் கணிப்பொறி தொழில் நுட்பம்

- பாபிலோன்-என்ற எளிமையான மொழிமாற்றம், அகராதி மற்றும் தகவல் திட்டம் (information program)
- க்யூபிட்டலின் (Cubital's) துரிதமாக திடப் பொருளை நகலாக்கும் இயந்திரம் (Cubital's Solid Rapid Prototyping machines) இது இயந்திரப் பகுதிகளின் 3D உருவங்களை நேரடியாக கணிப்பொறியின் திரையிலிருந்து உருவாக்கும்.
- க்யூபாக்ஸ் (CuBox) என்பது ஓர் இரண்டு-அங்குலம் சிறிய கணிப்பொறியாகும். இதற்கு எண்ணற்ற பயன்கள் உள்ளன. இதன் மதிப்பு ஏறதாழ 55 டாலர்கள்.
- டிஜிட்டல் எழுதுகோல் (Digital Pen), இது கையெழுத்தைக் கணிப்பொறி, அலைபேசி அல்லது மற்ற மின்னணுவியல் கருவிகளுக்குள் செலுத்தும்.
- டிஸ்க்-ஆன்-கீ (Disk-on-Key) என்பது, 1TBஅளவுக்கு செய்திகளைச் சேகரிக்கக்கூடிய USB ஃபிளாஷ் (flash) நினைவு திறன் கொண்டது.
- என்சைம்ஸ் (enzymes) மற்றும் DNA மூலக்கூறுகளைக்கொண்ட, உலகத்தில் மிகச் சிறிய DNA கணக்கிடும் இயந்திரம், DNA மூலக்கூறுகளை மூல ஆற்றலாக உபயோகித்து, கணித கணக்கீடுகளைச் செய்கிறது.
- என்லைட் (EnLight) என்கின்ற, ஒளியின் வேகத்தில் செயல்படும், ஆப்டிகல் (optical) செயலில், ஒரு நொடியில் பல ட்ரில்லியன் (trillion) செயல்பாடுகளைச் செய்ய வல்லது.
- லேசர் (Laser) விசைப்பலகை, என்பது ஒரு சுவற்றிலோ, அல்லது ஒரு மேஜையின் மீதோ திரைப்போல் காண்பிக்கும் ஒரு மெய்மையான விசைப்பலகை (Key Board) அதனைக்கொண்ட கையில் பிடிக்கும் கணிணியின் மூலமாகவோ கைப்பேசியைக்கொண்டோ தட்டச்சு செய்யலாம்.
- காகிதம் மற்றும் ஊடுகதிர் படத்திற்குப் பதிலாகக் கையெழுத்தை டிஜிட்டல் ஆக்குவது பென்ஃப்லோ (Penflow) தொழிற்நுட்பம் எனப்படும்.

- மூன்று பரப்புகளிலும் நம்மைப்பார்க்க வைக்கும் ஒரு கருவியான ப்ரைம் சென்ஸ் டிஜிட்டல் டிவைஸஸ் (PrimeSense digital devices)
- Quicktionary Electronic Dictionary, ஒரு எழுதுகோல் அளவில் இருக்கும் ஒரு ஊடுகதிர் படக்கருவி (scanner) ஊடுகதிர் படத்தின் மூலம் ஒரு வார்த்தையோ அல்லது சொற்றொடரையோ பிற மொழிகளில் மொழிபெயர்த்து அதைக் கணிணிக்கு அனுப்பும்.
- பற்றவைப்பு (welding), கட்டுமானம் ( packing) மற்றும் செயற்கையான அறிவுதிறன் (artificial intelligence) போன்ற பல தரப்பட்ட வேலைகளைச் செய்யும் ரோபோக்கள் (Robots) உள்ளன.

### நீர் பாதுகாப்பு கடல் நீரைக் குடிநீராக மாற்றுவது

இஸ்ரயேலின் தொழில் நுட்பம் பாலைவனங்களைச் சோலைகளாகவும், பூமியைப் பசுமையாகவும் மாற்றி சுத்தமான தண்ணீரையும், காற்றையும், ஆற்றலையும் கொடுக்கிறது. நெகேவ் (Negev) பாலைவனமானது. பலவிதமான மலர்களை ஐரோப்பாவிற்கும், டியுலிப்ஸ் (tulips) மலர்களை நெதர்லாந்திற்கும் (Netherlands) ஏற்றுமதி செய்கின்றது.

- நீரோட்டம் மற்றும் வேளாண்மை (Runoff Agroforestry) வனத்துறை அமைப்புகள், மரங்கள். செடிகள் மற்றும் அதனிடையே பயிர்கள் விதைக்கப்பட்டிற்கும் தடுப்பு அரண் கொண்ட மனைகளுக்கு அல்லது கைகளால் தோண்டப்பட்ட குழிகளுக்கு வெள்ளநீரைத் திசைத் திருப்பிவிடும் புதர் போன்ற மரங்கள் வளிமண்டல நைடரஜன் தம் வேர்களால் உறிஞ்சிக் கொள்ளும். மண் வளம் குறைவான விலையில் பராமரிக்கப்படுகிறது.
- வறட்சி தாங்கும் பயிர்கள் பாலைவனத்தில் கடுமையான வெயிலில் செழிப்பாக வளரும். உவர்நீர் அல்லது தரம்குறைந்த நீரில் உயிர்வாழும் பாசிகள். உயர்ந்த பதிப்புள்ள பொருட்களை மதிப்பில்லாத நிலத்தில் உருவாக்கும்.
- பயிர்கள் மற்றும் மரங்களுக்கு உபயோகப்படும் நீரை 50% குறைக்கும் வண்ணமாக டால்-யா (Tal-Ya) தொழில் நுட்பம் காற்றிலுள்ள பனித்துளிகளைச் சேகரிக்கும் ப்ளாஸ்டிக் தட்டுகளை உருவாக்கின.
- கடல் நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் சிகிச்சையில் இஸ்ரயேல் உலகத்தின் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. இதற்காக, 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் நூற்றுக்கணக்கான இயந்திரங்களை (plants) நிறுவி உள்ளது. இஸ்ரயேலின் IDE Technologies Ltd-யின் கிளை நிறுவனமாகிய IDE Americas Inc; தற்போது மேற்கு உலகத்தின் மிகப் பெரிய கடல்நீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தை, San Diego California-வில் திட்டமிடுகிறது. இதன் கட்டுமானமானது இந்த வருடத்தில் துவங்கும். இது, 2016-ஆம் ஆண்டு. San Diego-விற்கு உயர்தரம் குடிநீரைக்கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரயேலைக்குறித்து வேதாகமத்தில் காணப்படும் அநேக வாக்குத்தத்தங்கள் இன்னும் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ஆயினும், இஸ்ரயேலர்களின் விஞ்ஞானிகள் மற்றும் கணிப்பொறி நிபுணர்களின் தொடர்ந்து எடுக்கக்கூடிய முயற்சிகளின் வழியாக அவர்களுடைய கண்டுபிடிப்புகளை நாம் காணலாம்.

### பூமியைப் பசுமையாக்குதல்

"வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும்; பூமி தன் பலனைக் கொடுக்கும்; அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்; நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள்" (எசேக்கியேல் 34:27). குடியிருக்கத்தக்க நிலப் பகுதிகள் பாலைவனமாக மாற்றப்பட்டுள்ளது. நிலத்திற்குத் தேவையான ஊட்டச்சத்தை கொடுக்கும் மரங்களை நடுவதே இதற்குத் தீர்வாகும். கடந்த 100 வருடங்களில் இஸ்ரயேல் நாடு மட்டுமே அதிக மரங்களை வளர்த்துள்ளது.

### பூமி நீர் மற்றும் காற்று சுத்திகரித்தல்

"விதைப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும்; திராட்சச்செடி தன் கனியைத் தரும்; பூமி தன் பலனைத் தரும்; வானம் தன் பனியைத் தரும்; இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன்" (சகரியா 8:12). தூய்மையான நாடுகளுள் இஸ்ரயேல் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இஸ்ரயேலின் 50% பாசன நீர் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் ஆகும்.

- அமியாதின் (Amiad's) வடிகட்டுதல் மற்றும் சுத்திகரிக்கும் தொழிற்நுட்பங்கள், தொழிற் சாலைகள், குடியிருப்புகள் மற்றும் 70 நாடுகளிலுள்ள பண்ணைகளுக்குச் சுத்தமான நீரைக் கொடுக்கிறது.
- நிலத்தடி நீரை மாசுபடாமலிருக்க பூச்சிக்கொல்லி மருந்தோடு herbicides-யை கலந்து ஒரு பொருளைக் கொண்டுள்ளது.
- Agtech Ecoppia வின் ரோபோகள் ஆற்றல் உற்பத்தி செய்யும் பேனல்கஸ்லிருந்து வரும் தூசிகளை நீர் மற்றும் மனித தலையீடு இல்லாமல் சுத்தம் செய்கிறது.
- ArrowBio குப்பைகள் சேகரிக்கும் வண்டியிலிருந்து குப்பைகளை எடுத்து அவற்றை organic inorganic என தனிதனியாக பிரிக்கும்.

### நிலத்திற்கு நீர் பாய்ச்சுதல்

பிளாஸ்டிக் உமிழ்பானியைப் பயன்படுத்தி சொட்டு நீர் பாசனமுறை இஸ்ரயேலில் கண்டுபிடிக்கப்பட்டது. சிறிய துளைகள் மூலம் பாசனம் செய்தால், அத்துளைகளைச் சிறிய துகள்கள் அடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, பிளாஸ்டிக் உமிழ்பானில் (emitter) திசைவேகம் கொண்டு, நீர் பெரிய மற்றும் நீண்ட பாதைகள் வழியாக வெளியே தள்ளப்படுகிறது.

- commonSensor என்ற வயர்லெஸ் (wireless) சாதனம், பாசன தானியங்கியோடு சேர்ந்து, பயிர்கள் தாகமாக இருக்கும்போது மட்டும் தண்ணீர் விடுகின்றன.
- uManage என்பது. விவசாயிகள் தங்கள் பயிர்களைக்குறித்து சிறந்த முடிவுகளை எடுக்க தேவையான நிகழ் நேர தகவல்களைக் கொடுக்கிறது. தண்ணீர் உபயோகத்தை 30% மற்றும் வர நுகர்வை 15% ஆகக் குறைக்க விவசாயிகளுக்கு உதவி செய்கிறது.
- Green IQ-வின் வலை பயன்பாடு பாசனத்தையும் மற்றும் லைட்டிங்கையும் (lighting) வானிலைக்கு ஏற்றாவாறு மாற்றுகிறது.
- netafim smart Drip-பின் திறமைமிக்க துளி (micro-irrigation) பயிர்களுக்குத் துல்லியமாக நீர் பாசனம் கொடுப்பதற்கும், மெதுவான துளிகள் மூலம் நீரைக் கட்டுப்படுத்தி வெளியிடுகிறது. கீபூட்ஸ் (kibbutz) என்பவருக்குச் சொந்தமான இந்த நிறுவனம் உலகமெங்கும் பரவ சுமார் 112 நாடுகளில், 13 தொழிற் சாலைகளைக் கொண்டு செயலாற்றி வருகிறது.
- உலகமெங்கும் நீரின் பயன்படுத்துதலைக் கண்காணிக்க ஒரு மென்பொருளை (software - Takadu) தருகிறது. அந்த மென்பொருள் real time detection-யை அளிப்பதுடன், மேலும் பல விளைவுகளான கசிவு, வெடிப்பு, சில பகுதியில் ஏற்படும் முறிவுகள் மற்றும் பயனின்மை போன்றவற்றையும் கட்டுப்படுத்துகிறது.
- பாலைவன மீன்பிடித்தல். மீன்கள் மட்டும் நீர்வாழ் தாவரங்களை ஏற்றுமதி செய்வதில் நெஜீவ் (Negev) பாலைவனம், இன்று ஆதாயமளிக்கும் தொழிலான மீன் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த இடமாகும்

### பூமிக்கு மின் ஆற்றல் அளிக்கிறது

- பட்டம் உலாவல் (kite surfing) என்ற விதியின் அடிப்படையில், மென்மையான சூரிய ஆற்றல் இணைப்பு சூரிய சக்தியை 40% இன்னும் அதிக ஆற்றலை சூரியனிடமிருந்து எடுக்கிறது.
- நகராட்சிகளில் இருக்கும் நீர் கண்காணிப்பு முறையானது நீரோட்டத்தைக் கொண்டே நீர் சுழற்சியின் (HydroSpin) மூலம் மின் ஆற்றலை உருவாக்குகிறது.
- மிக அழகான சுற்றுச் சூழலை மாசு படுத்தாமல் உருவாக்கப்பட்ட Wind Tulip என்ற காற்று விசையாழி (wind turbine) மிகச் சிக்கனமானதும், அமைதியானதும், அதிர்வு இல்லாததுமாய் இருக்கிறது. அது எல்லா திசைகளிலும், மிக அதிக திறன் (efficiency) வாய்ந்த சுத்தமான ஆற்றலைத் தயாரிக்க வல்லது.
- அனுதினமும் ஜனங்களைப் பாதிக்கும், மருத்துவ கண்டுபிடிப்பில் இஸ்ரயேலின் ஆய்வறிவுச் சார்ந்த ஆராய்ச்சியாளர் முன்னிலை வகிக்கின்றனர். மனுக்குலத்தின் நலனிற்காக அவர்கள் அளித்த பங்கினைக் கீழே சில எடுத்துக்காட்டின் மூலம் காணலாம்.

### மருத்துவ செயற்பாடு

- ஆஸ்துமா நோயில் அவதிப்படும் மக்கள், தங்கள் வீட்டில் இருக்கும்போதோ, வெளியே செல்லும் போதோ, யார் உதவியும் இல்லாமல் தாங்களே தங்களைச் சமாளித்துக்கொள்ள AirSonea personal wheeze monitor என்ற கருவியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- WisePhone App என்ற கருவியில் ஒரு S.O.S. button-யை அழுத்தினால் முன்பே வரையறுக்கப்பட்ட தொடர்புகளுக்குத் தேவையான செய்தியை அனுப்பும்.
- கைப்பேசி கருவிகளில் (mobile devices) ஒரு செயற்பாட்டின் மூலம் (App) பேச்சுத் திறமைக் குறைந்த பிள்ளைகளுக்கு வரைப்பட அடையாளங்கள் மூலம் செய்திகள் அனுப்பவோ ஏற்றுக்கொள்ளவோ உதவியாய் இருக்கிறது.

### மருத்துவ ரோபோடிக்ஸ் (Robotics)

- ReWalk என்ற நடக்க உதவும் ஒரு கருவியானது, பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவரை, நேராக நிற்கவும், நடக்கவும் மாடிப்படிகள் ஏறவும் உதவியாய் இருக்கிறது.
- Mazor Robotics என்ற நிறுவனம் மிகக் குறைந்த கதிர்வீச்சு மற்றும் அதிக நுட்பமான, முதுகுத் தண்டு அறுவை சிகிச்சை செய்யும் கருவியினைச் செய்துள்ளது.
- SmartHand என்ற பெயர் பெரும் ஒரு robotic, செயற்கையாக, உண்மையான கைப்போல் செயலாற்றி, அது நோயாளிகளை எழுதவும், தட்டச்சில் எழுதுக்களைப் பதிக்கவும், இசைக்கருவிகள் வாசிக்கவும் இன்னும் பல அசைவுகள் செய்ய உதவுகிறது.

### மனித உடலும், இரத்தமும்

- ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் 200,000 மேற்பட்ட ஜனங்கள் செப்சிஸ் (Sepsis) என்ற இரத்த சம்பந்தப்பட்ட தொற்றுநோயால் மரித்து வந்தனர். அந்த நோயைக் கண்டுபிடிக்க இஸ்ரயேல் Cheetah

Medical's Nicome கண்காணிப்பு கருவியைப் பயன்படுத்தியது. இதன் மூலம் மரணத்தின் 40% ஆகக் குறைந்தது.

- OrSense's NBM-200 என்ற கண்காணிப்புக் கருவி இரத்த கொடையாளியின் இரத்த அளவு (hemoglobin level) மற்றும் இரத்தச் சம்பந்தப்பட்ட பிறச் செய்திகளையும், தொடர்ந்து அல்ல குறிப்பிட்ட நேரத்தில் அளக்கும் தன்மை வாய்ந்தது. அது உயிர் நிலைச் சார்ந்த அபாய கருவிகள் மற்றும் வீணானவைகளை தனியே பிரித்து எடுத்துவிடும்.
- NeuroEndoGraft flow diverters மூளை ஊறல்களில் இருக்கும் இரத்த ஓட்டத்தைத் திருப்பிவிட்டு அந்த ஊறல்கள் வெடிக்கும் அபாயத்திலிருந்துப் பாதுகாக்கும்.

**எலும்பு/குருத்தெலும்பு** (Cartilage)

- "Agili-C" என்ற உருபு மாற்று (implant), நம் உடலில் மிக ஏராளமாகக் காணப்படும் hyaline குருத்தெலும்பைச் சீரமைக்கும்.
- Bonus Biogroup implant உயிரணுக்களிலிருந்து மிக நலமான எலும்புகளைத் தோற்றுவிக்கும்.
- InSpace Balloon cushions-யை இரண்டு உரசி கொண்டிருக்கும் எலும்புகளுக்கு நடுவே வைத்தால், அது வலியைக் குறைத்து மறு சீரைமைப்பு முறைகளை எளிதாக்கும்.

**இருதயம்**

- CathMaps என்ற கைப்பேசி ஆப் (app) ஒன்று இருதய நோயாளிகளின் மருத்துவ வரலாற்றைச் சேமித்து, உடனடி தேவையின்போது உலகில் எங்கிருந்தாலும், சமீபத்தில் இருக்கும் இருதய ஆய்வு மையத்தை இடம் காட்டும்.
- Healarium என்பவர் உருவாக்கிய ஒரு கைப்பேசி இருதய நோயாளிகளின் இரத்த அழுத்தத்தையும், எடையையும் அவர்களின் இரத்தத்தில் இருக்கும் சர்க்கரை அளவையும் பதிவு செய்கிறது.
- Smart-digital hWear என்ற T-shirt ஒன்று கொண்டுச் செல்லும் ஆற்றலுடைய நார்ப்பொருளால் நெய்யப்பட்டுள்ளது. அது ஒரு ECG இயந்திரம் செய்யும் வேலையைச் செய்து இருதயத்தின் முக்கியமான செய்திகளை வைத்தியரின் கைப்பேசிக்கு அனுப்பிவிடும்.

**பார்வை**

- Bio-Retina, செயற்கை முறையில் புகுத்தக்கூடிய கருவிழி, laser ஆற்றலுடைய மூக்குக் கண்ணாடியில் பொருத்தப்படுகிறது. அது நியூரானைத் (neuron) தூண்டிவிடும் மின் ஆற்றலுக்குள் வெளிச்சத்தை அனுப்புகிறது.
- 60 வயதுக்கு மேற்பட்ட 13% ஜனங்கள் தற்சமயம் கையாளப்படும் கண்விழி விறைப்பு நோய் (Glaucoma) அறுவை சிகிச்சையினால் பாதிக்கப்படுகிறார்கள். இதற்குப் புரட்சியாக ExPRESS miniature glaucoma shunt என்ற புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கண் பார்வைத் தெரியாத ஜனங்களுக்கு உதவியாக OrCam என்ற ஒளிப்படக்கருவி (Camera) உருவாக்கப்பட்டுள்ளது. அது மூக்குக் கண்ணாடியில் பொருத்தப்பட்டு, அணிபவரின் சட்டைப் பைக்குள் ஒரு சிறிய கணிணியில், ஒரு மின் கம்பியின் மூலம் அந்தக் கண்ணாடி இணைந்திருக்கும். செவியில் ஒரு ஒலி வாங்கும் கருவி, அதை அணிந்திருப்பவரிடம், பட்டியல், செய்தித்தாள், தெருக்கள் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றை அவர் காதில் பேசும். அது முகங்களை அடையாளம் கண்டுக்கொள்ளும். அது சந்தி வழிகாட்டி நிற அடையாள விளக்குகளையும் கண்காணிக்கும். (traffic light)

**புற்று நோய்**

- Prostate புற்றுநோயின் மூலம் ஏற்படும் கட்டிகளை ஒரு சிறிய பலூன், உடம்பில் இருக்கும் பாதிக்கப்பட்ட திசுக்களிலிருந்து ஆரோக்கியமான திசுக்களைப் பிரித்தெடுத்து ஒளிக்கதிர் வீச்சிலிருந்து அந்த ஆரோக்கியமான பகுதிகளில், எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாமல் தடுக்கிறது.
- InSightec's ExAlblate OR என்ற கருவி *MRI-guided ultrasound (செவியுணரா ஒளி)-யின் துணையுடன், அறுவை சிகிச்சை இல்லாமல் புற்றநோய் கட்டிகள் மற்றும் கருப்பையில் இருக்கும் நாரியல் கட்டிகளையும் (*fibroid cysts)அழிக்கிறது.
- IceSense3 என்ற கருவி ஆரம்ப காலத்தில் மார்பகத்தில் உருவாகும் புற்றுநோய் கட்டிகளைக் கரைத்துவிடும். இந்தச் செவியுணர ஒலியின் துணையால் (ultrasound-guided) செயல்படும் இந்தக் கருவி மிகச் சிறிய இடத்தையே ஆக்கிரமித்து வெற்றிகரமாக சின்னச்சின்ன புற்றுநோய் கட்டிகளைத் துடைத்து அழித்து விடும்.

**நீரழிவு நோய் ;** (Diabetes)

- Dario diabetes என்பது ஒரு கைப்பேசி செயற்பாடு (mobile app) அது ஒரு சட்டை-பை அளவில் ஒரு இரத்த-சர்க்கரை (blood-Glucose) கண்காணிப்பு கருவியும் இணைந்திருக்கும். நோயாளிகள் மற்றும் மருத்துவ தொழில் சம்பந்தப்பட்டவர்கள் இதன் மூலம் பல குறிப்புகளை ஆய்ந்து அறிந்துகொள்ளலாம்.
- HelpAround என்பது அருகில் இருக்கும் நபரை மாத்திரை அளவு கருவி அல்லது இன்சுலின் எடுத்து வர அழைக்கும் ஒரு செயற்பாடு (app) செயலின்மையினாலோ (coma), தீடீர்த் தாக்குதல் (seizure) உண்டானாலே ஒரு பட்டனை அழுத்துவதன்

மூலம் உடனடியாகப் பதில் அளிப்பவரை அழைக்கும் ஒரு கருவி.

- உலகில் முதன் முதலில் கண்டுப்பிடிக்கப்பட்ட மருத்துவ வினைத்திறன்மிக்க கைப்பேசி (*smart phone-LifeWatch V), ஆகும். அதில் இரத்த-சர்க்கரை அளவைத் தெரிந்துகொள்ள கல் பதிக்கப்பட்டுள்ளன. நமது கைப்பேசியின் கட்டுமானத்தில் (frame) உள்ள நுழைவாயில் (portal) மூலம், இரத்த-சர்க்கரை சோதனை துண்டுகள் (*Blood glucose test strips) சொருகப்பட்டு அதன் விளைவுகளை தானே இயங்கி (automatically) தொலைவிலுள்ள server-க்கு அனுப்பும்.

Parkinson's Disease **(மனம் மற்றும் சரீர இயக்கத்தைப்பாதிக்கக்கூடிய நரம்பு மண்டல நோய்)**

- Azilect என்பது Parkinson's நோயின் அறிகுறிகளைக் குணப்படுத்த ஒரு பிரபலமான ஒரு மருந்தாகும். அது 56 நாடுகளிலுள்ள நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.
- வழிகாட்டும் உருவங்களின் (Guided imagery) உதவியால் மருந்துகள் இல்லாமலேயே துடிப்பதிர்வை (tremors) நோயாளிகளிடமிருந்து தடுத்து நிறுத்தப்படும்.
- InSightec's ExAblate Neuro என்பது ஆக்கிரமிக்காத ஒரு மருத்துவம் (Non-invasive treatment) அதில் செவியுரை ஒலியானது (ultrasound) காந்தக இயல்பு மற்றும் ஒலியலை எதிர்வின் வழிகாட்டுதலுடன் (*magnetic-resonance guided ultra sound) துடிப்பதிர்வை (tremors) குணமாக்கும்.

**நோய் நச்சு கிருமிகள்** (viruses)

- விசேஷ விதமாய் பதப்படுத்தப்பட்ட துணிகள், நோய் நச்சு, (virus) நோய் கிருமிகள் (bacteria) மற்றும் நெருப்பை அழித்துவிடும்.
- Vecoy Nano மருந்துகள் ஒரு புது முறைமையில் கிருமிகளை அழிக்கிறது. மிக நுட்பமான (microscopic) உயிரணுக்களைப் போன்ற தூண்டிற்பொருட்களைக் (decoys) கண்டு இந்தக் கிருமிகள் ஏமாந்து தாக்கிவிடும். இந்தத் தொழில் நுட்பம் தந்திரமாக ஒரு கிரிமியை தற்கொலை செய்ய வைத்துவிடும். எபோலா, ஹெப்பாடைடிஸ், (hepatitis) ஏய்ட்ஸ் (*Ebola, hepatitis. HIV) வேதியியல் சார்ந்த கிருமிகள் (chemical) உயிர்நிலைச் சார்ந்த கிருமிகள் (biological) போன்ற அச்சுறுத்தும் கிருமிகளை இங்கு நடுநிலைப்படுத்திவிடலாம். (neutralize)

**புண்களை ஆறவைக்கும் சிகிச்சை முறை**

(Healing wounds)

- Aid-Tec, என்பது ஒரு வினைத்திறன்மிக்க ஒட்டுத்தன்மைக்கொண்ட கட்டுத் துணி (smart adhesive bandage). அதற்குள் இருக்கும் மாத்திரை உடைந்தால் அது குணப்படுத்தும் ஒரு பொருளை நோய் நுண்மங்களை ஒழிக்கப்பெற்ற ஒரு பெயுறையில் வெளிவிடும் (sterile pad). இந்த நீர் காப்பான் கட்டுத்துணிகளில் (water proof bandage) உறையச் செய்யாதப் பொருட்கள் (anticoagulant) கிருமிகளின் எதிரி (anti biotic) காளான்களின் எதிரி (antifungal) பாலுண்ணியை அகற்றும் மருந்து (wart remover) அல்லது காலில் ஏற்படும் மேல் தோல் தடுப்பைச் சரி செய்யும் மருந்து (corn remover) பொருத்தப்பட்டிருக்கும்.
- புறதோடின் அறுவை சிகிக்கை முறையில் (laparoscopic Surgery) அடிவயிற்றைத் திறக்க A Gordian Trocar என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. அறுவை சிகிச்சை முடிந்து, அறுவை சிகிச்சைக்குரிய கருவிகளை வெளியேற்றியப் பின் இந்த Gordian Trocar திறந்திருக்கும் வயிற்று பாகத்தை முத்திரை (seal) இட்டு மூடி விடும்.

ஒருநாள், "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்" (ஏசாயா 33:24). ஆனால் அதுவரை இந்த இஸ்ரயேல் ஜனங்கள் பிற நாட்டினரோடு இணைந்து பல நூற்றுக் கணக்கான மருத்துவ கண்டு பிடிப்புகளை உலகின் முன்னேற்றத்திற்காகச் செய்ததற்கு நாம் என்றும் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

**பூமியின் எல்லா திசைகளிலும் சோர்வைத் தணிக்க சிறகுகளை விரித்தல்**

சிறிய தேசமாகிய இஸ்ரயேல் பலவிதமான முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, இயற்கையின் பேரழிவு, நோய் மற்றும் வறுமையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகுந்த உதவி புரிகின்றனர். அரசியலோ அல்லது மதங்களையோ பொருட்படுத்தாமல் உலகெங்கிலும் பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களிடம் முதன் முதலில் செல்பவர்கள் இஸ்ரயேலின் மீட்பு மற்றும் விடுவிப்பு அமைப்புகளாகும். அவர்களிடம் தகுதிவாய்ந்த பணியாளர்கள் கொண்ட அவசர மருத்துவமனைகள் உள்ளது. அங்கிருந்து டண் கணக்கில் உணவுப்பொருட்கள், மருந்துகள், நிவாரணப்

பொருட்கள் மற்றும் ஆயிரக் கணக்கில் டாலர்கள் வழங்கப்படும்.

இஸ்ரயேல் கீழே காணும் இயற்கை பேரழிவுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிந்துள்ளனர். மியான்மரில் நடந்த புயல், அர்மேனியா, ஜியார்ஜியா, துருக்கி, ஜாப்பான், பெரு, சீனா மற்றும் ஹெய்ட்டியில் (Haiti) நடந்த பூகம்பம். சிரியா, லியோனி, லிபியா மற்றும் குனியாவில் எபோலாவைக் குணப்படுத்த மருத்துவகம். கென்னியாவில் இருந்த பஞ்சம் ஜீக்கு ரீ-பப்லிக்கு, (Czech Re-public) பாகிஸ்தான், பாராகுவே, செர்பியா மற்றும் போஸ்னியாவில் நடந்த வெள்ளம். காத்ரீன்னா (Katrina) மற்றும் அமெரிக்காவில் சாண்டி (Sandy) என்னும் இடத்தில் நடந்த சூறாவளி, தெற்கு சூடானில் குஷ்டரோக மருத்துவகம். போஸ்டன் மற்றும் மும்பையில் தீவிரவாத தாக்குதல். தெற்கு ஆசியா, தாய்லாந்து, ஸ்ரீலங்கா, சிலோன் மற்றும் ஜாப்பானில் சூனாமி. காங்கோவில் நிகழந்த எரிமலை வெடிப்பு. இந்தப் பட்டியல் போய்க்கொண்டே இருக்கும்.

### இஸ்ரயேலின் மனிதாபிமான உதவிகள்

இஸ்ரயேலின் மருத்துவமனைகளில் காயப்பட்ட காசான்ஸ் (Gazans) மற்றும் பாலஸ்தீனியர்களுக்கு, ஹம்மாஸ் வீரர்களுக்கு, ஜோர்டான், சௌதி அரேபியா மற்றும் ஈராக்கில் இருக்கும் அரபியர்களுக்கு மேலும் ஆபிரிக்கா அகதிகளுக்குச் சுகாதார உதவிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் உலகம் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில், சிறு பிள்ளைகளுக்குத் தேவைப்படும் அவசர இருதய அறுவை சிகிச்சை மற்றும் அதனைத் தொடர்ந்து அந்தப் பிள்ளைகள்மேல் கவனம் செலுத்துதல் போன்ற பணிகளை, "ஒரு குழந்தையின் இருதயத்தைப் பாதுகாத்துக்கொள்" என்ற நிறுவனம் செய்து வருகின்றது.

ஆபிரிக்காவிற்கு இஸ்ரயேல் செய்யும் உதவிகள்-சுகாதாரம்-மலேரியா நிபுணர்கள், மருத்துவர் மற்றும் செவிலியருக்கான பயிற்சி, மருத்துவ மனைகளில் அவசர சிகிச்சை அறைகள் கட்டுவது, எயிட்ஸ் நோயாளிகளுக்கு வைத்தியம், உயிர்காக்கும் கண் அறுவை சிகிச்சை, வளர்ந்து வரும் வெப்ப மண்டல பகுதிகளில் இருக்கும் நோய்களுக்கான ஒரு மையம். விவசாயம்: தானிய பைகள், நவீன முறை மீன் பிடிக்கும் தொழிற் நுட்பம், மற்றும் விவசாயத்தில் பயிற்சியளிக்கும் சில பாடத்திட்டங்கள். வியாபாரம்: பயிற்சி திட்டங்கள் வெளியே செல்லும்பொழுது தொலைப் பேசியை சார்ஜ் செய்ய ஒரு சிறிய சூரிய கதிர்களைக்கொண்டு செயல்படும் ஒரு கருவி, விளக்குகள் மற்றம் வேறு சில உபகரணங்கள்.

அவசர கால உதவிகள்: உதவி தொகுப்புகள் கைப்பேசி செயற்பாட்டிற்குரிய பயிற்சி திட்டங்கள். (mobile apps) ஆற்றல், சுகாதாரம் மற்றும் ஆர்வாண்டாவில் (Rwanda) சூரிய வெளிச்சத்தின் ஆற்றலைப் (solar energy power plant) பயன்படுத்தும் ஒரு மின் நிலையம் Paulee Clean Tec என்பதை தண்ணீர் இல்லாமல், தேவையற்ற அழுக்குகளையும் சுத்தம் செய்யும் ஒரு கழிப்பறை. பள்ளிகளுக்கும், மருத்துவங்களுக்கும், சூரியஒளி கதிர்வீச்சின் ஆற்றலுடன் தண்ணீர் கொடுப்பது.

### பத்து மனுஷர்

"அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (சகரியா 8:22, 23)

புதிய உடன்படிக்கை மற்றும் கிறுஸ்துவின் இராஜ்யத்தின் கீழ் தேவன் இஸ்ரயேலை ஆசீர்வதிக்கும்பொழுது இன்னும் சிறந்தவைகள் வர இருக்கின்றன. அப்பொழுது இஸ்ரயேலோடு தேவன் இருக்கிறார் என்று மனித குடும்பங்கள் அனைத்தும் கண்டுகொள்ளும். இஸ்ரயேலின் தேவனைப்பற்றி அறிந்துகொள்ளவும், அவரைப் பின்பற்றவும் அவர்கள் மனம் ஏங்கும் (ஏசாயா 2:1-4; மீகா 4:1-4). அந்த நாட்கள் விரைவில் வந்துவிடும் என்று எண்ணும்பொழுது வியப்பாக உள்ளது!

.

தற்கால சிக்கல்

# யூதர் பகைமை மற்றும் இஸ்ரயேல்



"கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்; துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார். (சங்கீதம் 147:2)

Leonard Griehs.

செப்டம்பர் 2014-இல் ஐரோப்பா முழுவதும் இஸ்ரயேலுக்கு எதிரான பேரணிகள் மற்றும் யூதரின் மேல் தாக்குதலும் நடந்தேறின. "இன்றும் ஜெர்மானியில் எந்த ஒரு தனி யூத நிறுவனமும், காவல் துறை பாதுகாப்பு இல்லாமல் போக முடியாது" என்றார். ஜெர்மனியின் பிரதம மந்திரி ஏன்ஜிலா மெர்கெல் (Angela Merkel) இஸ்ரயேலில் அரேபியர்-யூதர்களுக்கு இடையே நடந்த சச்சரவின் காரணமாக எல்லா இடங்களிலும் முஸ்லீம்களுக்கும் மற்றும் யூதர்களுக்கும் மிகுந்த அழுத்தங்கள் உண்டாயின. பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலியில் யூதருக்கு எதிராக கோஷங்களும், அச்சுறுத்தல்களும் துவங்கியது.

The Newsweek என்ற பத்திரிக்கை ஜூலை 30, 2014-இல் ஒரு வார்த்தை தலைப்பைக் கொண்ட ஒரு செய்தியை வெளியிட்டது - "புறப்படு" EXODUS. மீண்டும் ஐரோப்பாவிலிருந்து யூதர்கள் வெளியேறுகின்றனர் குறிப்பாக பிரான்ஸிலிருந்து. ஜனவரி 2015-இல் அலியாஹ (aliyah) என்பவர் எழுதிய "Bridges of Peace" என்ற புத்தகத்தில் 10 வருடங்களைக் காட்டிலும் இந்த வருடமே மிக அதிக அளவிலான குடிபுகுதல் நிகழ்ந்தது, அதாவது 26,500/ 2014-இல் பிரான்ஸிலிருந்து குடிபுகுந்தவர் 7000 பேர், முந்தின வருடத்தை விட இது இரண்டு மடங்குக்கு மேலாகும். முந்தைய வருடத்தை விட பிரான்ஸிலிருந்து, இதுவே முதல் தடவையாக இவ்வளவு யூதர்கள் இஸ்ரயேலுக்குக் குடிபுகுந்தனர். 2014-இல் உக்ரேனிலிருந்து (Ukraine) வெளியேறிய யூதர்கள் மூன்று மடங்கானார்கள். 2020-லிருந்து 5840-ஆக உயர்ந்தது. மேற்கு ஐரோப்பாவிலிருந்து இஸ்ரயேலை நோக்கிச் சென்றவர்கள் 88% ஆக உயர்ந்தார்கள். மேலும் ரஷ்ய நாட்டிலிருந்தும் இஸ்ரயேலை நோக்கிச் சென்ற ஜனங்கள் 50% ஆக உயர்ந்தது.

102 நாடுகள் மற்றும் நாட்டாட்சி எல்லைகளிலுள்ள 53,100 வயது முதிர்ந்தவர்களின் விசாரணையின் அடிப்படையில், News week பத்திரிக்கையில் வெளியிட்ட கட்டுரையாகும். அந்தக் கட்டுரையை வெளியிட்டவர்கள் - The ADL Global 100: "யூத பகைமையின் ஒரு அட்டவணை". உலகம் முழுவதும் யூத பகைமை என்ற மனப்பான்மை உறுதியாக பரவி வருகின்றது. யூத பகைமையில் 26% மக்கள் மிக ஆழமாக தாக்கப்பட்டிருக் கிறார்கள், அதாவது உலகிலுள்ள 1பில்லியன் மக்கள் யூத மக்களைத் தவறாக நினைக்கிறார்கள்.

**கண்டுபிடித்தவற்றில் சில**

- 26% மக்களிடையே யூத பகைமை மனப்பான்மையே உள்ளது.
- அவர்கள் படுகொலைப்பற்றி 54% மக்கள் கேட்டதே இல்லை.
- முதல் படிவம், "யூதர்கள் அவர்கள் வாழும் நாட்டைவிட இஸ்ரயேல்மேல் அதிகப்பற்று வைத்துள்ளனர்."
- இரண்டாம் படிவம்: வணிக உலகில் யூதர்களிடம் நிறைய ஆற்றல் உண்டு.
- விசாரித்தவர்களில் 74% பேர் யூதரைப்பார்த்ததே இல்லை. ஆனாலும் அதிலும் நான்கு பேரில் ஒருத்தர் (1/4) யூத பகைமை மனப்பான்மை உடையோராய் உள்ளனர்.

- 1% முதல் 10% வரை உலக ஜனத்தொகையில் யூதர்கள் இருக்கிறார்கள் என்று 30% மக்கள் நம்புகிறார்கள். (நடைமுறையில் 0.19% யூதர்கள் உள்ளனர்).


"ஐரோப்பிய யூதர்கள் முற்றுகையிடப்பட்டனர்" என்ற கருத்தரங்கை ஜார்ஜ் டவுன் பல்கலை கழகத்திலுள்ள சாரா ஃபென்பெர்கு (Sarah Feinberg) என்ற பேராசிரியர் நடத்தினார். இஸ்ரயேலின் சச்சரவில் பாலஸ்தீனியர்களின் மரணத்தைக்குறித்த கண்டனம் விவாதிக்கப்பட்டது. ஐரோப்பாவில் சிரியாவிற்கு எதிராக எந்த ஒரு போராட்டமும் இல்லாது நேரத்தில், சிரியாவில் 160,000 பொது மக்கள் மற்றும் 1800 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அவர்கள் மேற்கோல் காட்டினார்கள். ஃபின்பெர்கு (Feinberg) "*Israelization"என்ற புதிய வார்த்தையை உருவாக்கி, "யூதர்களின் கேள்வி" என்று கூறினார். யூதர்களுக்கு ஐரோப்பாவில், ஹிட்டலரின் தலைமையில் வாழும் உரிமை இருந்ததா? இது, "இஸ்ரயேல் கேள்வி" என்று மீண்டும் பிறந்துள்ளது. இஸ்ரயேலுக்கு வாழும் உரிமை உள்ளதா?

"மிகச் சத்தமான கண்டன குரல் எழுப்பிய" அறிவாற்றல் நிறைந்த ஒரு சமுதாயம், தற்பொழுது பொருத்தமில்லாத, அரசாங்கத்திற்கு எதிரான, வணிகத்திற்கு எதிரான, நிறுவனங்களுக்கு எதிரான மக்களுடன் நம்பிக்கொண்டு, மத்திய கிழக்கு மாநிலங்களில் என்ன தீங்கு நேர்ந்தாலும் அதற்கு யூதர்கள்மேல் பழிச் சுமத்திக்கொண்டிருக்கிறது" என்கிறார் ஃபின்பெர்கு.

**தேவன் தலையிடுவார்**

"அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்." (சகரியா 12:3)

பல வேத மாணவர்கள், இன்று இந்த தேவ வார்த்தைகள் நிறைவேறிக்கொண்டிருக்கிறது என்று நம்புகிறார்கள். இஸ்ரயேலோடு நட்புறவுக்கொள்ளும் நாடுகள் அனைத்தும் விமர்சிக்கப்படுகிறது. மிகக் குறைந்த நாடுகளே இஸ்ரயேலுக்குத் துணை நிற்க விரும்புகிறார்கள். இஸ்ரயேலின் வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள்ளாய் இருக்கிறது. முன்னால் நண்பர்களெல்லாம் அவர்கள் இருக்கும் இடத்தைச் சுற்றி வேலி அமைத்துக்கொண்டனர். இறுதியான நெருக்கடியின்போது, பிறருடைய இராணுவ தலையீடின்றி, ஆதாரப் பூர்வமாக இஸ்ரயேல் தனித்து நிற்கும். ஆயினும் தேவன் அவர்களை விடுவிப்பார். (யோயேல் 2:18-20; எசேக்கியேல் 38:18-23; சகரியா 14:3-9)



# ஜனங்களை இலக்கம் பார்த்தல்

"சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது." (1 நாளாகமம் 21:1)

பல ஜனங்கள் மிகுந்த வேதனையடையச் செய்த இராஜாவாகிய தாவீதின் கடுமையான பாவம் ஏன்? பத்சேபாளின் கதையும், அவளைத் தனக்குச் சொந்தமாக எடுத்துக்கொள்வதற்கு அவளுடைய புருஷனாகிய உரியாவைப் போர்க்களத்தில் தாவீது கொன்ற காரியங்களே நம்முடைய சிந்தைக்கு முதலில் வருகிறது. ஆனால் 70,000 மனுஷர் மரிக்கும்படியாக தாவீது மற்றொரு பெரிய குற்றம் செய்தார். 70,000! எருசலேமில் காணப்படும், ஒரு விசேஷித்த உண்மையான இடத்திற்கு இந்தக் குறிப்பு சம்மந்தப்பட்டதாக உள்ளது.

இந்த உருக்கமான, நாடகவடிவான இந்தக் கதை, தாவீதின் உண்மையான இருதயத்தில் இன்னும் ஆழமான பார்வையைக் கொடுக்கிறது. மேலும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, ஒரு நாளில் அனைத்து ஜனங்களுக்கும் பல முக்கியமான பாடங்களையும் கற்பிக்கும். தேவனுடைய நீதியான நிலையைவிட்டு, விழும்போது, அதைக் கவனித்து, முழுமையாக மனம் வருந்துவது மிக அவசியம் என்ற பாடங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பிரச்சனையின் போதும் மனுஷன் தேவனை நம்ப வேண்டியது மிக அவசியம் என்ற பாடம் இதில் அடங்கும்.

### ஜனங்களை இலக்கம் பார்த்தல்

ஜனங்களை இலக்கம் பார்த்தலைக் குறித்து 1 நாளாகமம் 21-ஆம் அதிகாரத்திலும் அதற்கு இணையாக அதே சம்பவத்தை 2 சாமுயேல் 24-ஆம் அதிகாரத்திலும் காணலாம். தாவீதின் ஆட்சி காலத்தில் சுற்றியுள்ள தேசங்களோடு பல போர்கள் நடத்தப்பட்டது. குறிப்பிட்ட ஒரு நேரத்தில், யுத்தவீரர்களை இலக்கம் பார்க்கும்படி தாவீது கட்டளையிட்டார். தங்களுடைய எதிராளிகளிடமிருந்து, இரட்சிக்க வல்லமையுள்ள தேவன்மேல் விசுவாசம் வைத்திருந்த தாவீதின் படை தளபதியாகிய யோவாபின் ஆலோசனைக்கு எதிராக இந்தக் கட்டளையிடப்பட்டது. தாவீதின் கிரியை தேவனை விசனப்படுத்தியது. இதினிமித்தம் இஸ்ரயேல் எல்லைகளில் 70,000 பேர்களைக் கொன்று போடும்படிக்கு ஒரு சங்காரத் தூதன் அனுப்பப்பட்டார் (2 சாமுயேல் 24:15). அந்தத் தூதன் தம்முடைய வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு எருசலேமுக்கு வந்தபோது "இது போதும்" என்று சொல்லி தேவன் அவருடைய கரங்களைத் தடுத்தார். (2 சாமுயேல் 24:16)

எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே நின்றபோது அந்தத் தூதன் சங்காரத்தை நிறுத்தின காரியம் ஏதோ திட்டமிட்டதுபோல தோன்றுகிறது. கர்த்தரின் தூதன் ஜனங்களைச் சங்கரிக்காதபடிக்கு அவருடைய கரத்தை நிறுத்தும்படிக்கு அந்தக் களத்தில் ஒரு பலி பீடத்தைக் கட்டும்படி தாவீதுக்குக் கட்டளையிடப்பட்டது. கால போக்கில், சாலொமோனின் ஆலயம் இந்த இடத்தில் கட்டப்பட்டது. இந்நாளில் இது எருசலேமிலுள்ள ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.

ஜனங்களை இலக்கம் பார்க்கும்படிக்கு சாத்தான் தாவீதுக்கு ஆலோசனைக் கொடுத்ததாக 1 நாளாகமம் 21:1-3 வசனங்கள் கூறுகிறது. சாத்தான், ஜனங்களுடைய பலவீனத்தை நன்கு அறிந்திருக்கிறான். இந்த விஷயத்தில் தேவன், தாவீதை சோதிக்கும்படி சாத்தானை அனுமதித்தார். எதிராளிகளை ஜெயிப்பதற்குப் பலமுள்ள இராணுவ சேனைகள் இல்லை என்று தாவீது எண்ணினார். அவர் தன்னுடைய இராணுவ பலத்தினால் கொண்ட பெருமையை சாத்தான் பயன்படுத்தியிருக்கலாம். எப்படிப்பட்ட யுக்தி பயன்பட்டிருந்தாலும் தாவீது தேவன் பேரில் கொண்டிருந்த முழுமையான விசுவாசம் குறையுள்ளதாகக் காட்டுகிறது.

அம்மோனியர்கள் மற்றும் பெலிஸ்தர்களோடு (1 நாளாகமம் 20) இஸ்ரயேல் பல யுத்தங்கள் நடத்தியது. இஸ்ரயேலிலுள்ள யுத்த வீரர்களை இலக்கம் பார்க்கும்படி தூண்டியபோது, ஒருவேளை சாத்தான் இஸ்ரயேலின் வெற்றிகளுக்குத் தக்கவாறு இயங்கியிருக்க வேண்டும். அவன் யுத்தங்களில் இஸ்ரயேலைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆகவே அவன் மற்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தின ஒரு யுக்தியை மீண்டும் இங்குப் பயன்படுத்தினான். அவர்களுக்கு அவன் கேடுவிளைவிக்க முயற்சித்தான். இப்படிச் செய்வதினால் தேவனுடைய கோபத்தைத் தூண்டி, அவரே இவர்களைக் கொன்றுவிடுவார் என்று சரியாக திட்டம் வகுத்தான்.

எண்ணாகமம் 31:16-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள பிலேயாமின் சம்பவம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த இரண்டு சம்பவங்களிலும், தேவன் முன்கூட்டியே தீர்மானித்தப்படி இஸ்ரயேலரைக் கொன்று போட்டார். சாத்தான் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, தேவனுடைய நீதியின் படிநிலையைப் பயன்படுத்திக் கொண்டான். இப்போது அவன் தாவீதின் பெருமை அல்லது பயத்தைப் பயன்படுத்தி தாவீதுக்கும் (மற்றும் இஸ்ரயேல்) தேவனுக்கும்இடையில் ஒருதடையை நுழைத்தான்.

**ஜனங்களை இலக்கம் பார்த்தல் ஏன் பாவமானது?**

ஜனங்களை இலக்கம் பார்ப்பதற்காக எடுத்த முயற்சியினிமித்தம், "வானத்து நட்சத்திரங்களைப்போல இஸ்ரயேலை பெருகப்பண்ணுவேன்" (1 நாளாகமம் 27:23) என்ற தேவனுடைய வாக்குத்தத்தை தாவீது சார்ந்திருக்கவில்லை. இலக்கம் பார்ப்பதை ஏற்றுக்கொள்ளதக்க நோக்கமுமில்லை. தேவனிடத்திலிருந்து எந்தக் குறிப்பான கட்டளையும் பிறக்கவில்லை. தாவீது முதலில் தேவனுடைய சித்தத்தை ஆராய்ந்து அறியவில்லை. ஆகவே தாவீதின் நோக்கம் பாவமாக இருந்தது என்ற முடிவுக்கு வரலாம்.

**யோவாபின் ஆலோசனை**

தாவீதின் படைக்கு யோவாப் ஒரு தளபதியாக இருந்தப்போதிலும், அவர் தாவீதின் சகோதரியாகிய செருயாவின் குமாரனாகவும் இருந்தார். யோவாபின் எடுத்துக்காட்டு இலாபகரமானது. நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தவறானப் பாதையில் செல்வதற்குத் தெளிவான முடிவுகளை எடுக்கும்போது, அவர்கள் ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கேளாதவர்களாக இருந்தாலும் சரி அவர்களின் தவறுகளை எடுத்துகூற வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தேவன்மேல் சார்ந்திருக்கவும், அதற்குப்பதிலாக, பொறுமை அல்லது பயத்திற்கு இடங்கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று நாம் யோவாபைப்போல அவர்களுக்கு முன் சவாலிட வேண்டும். (நீதிமொழிகள் 27:6-ஆம் வசனம் காண்க)

ஜனங்களை இலக்கம் பார்க்க வேண்டுமென்று தாவீது கட்டாயப்படுத்தியதால் ஜனங்களை எண்ணும்படிக்கு யோவாப் இஸ்ரயேல் முழுவதும் பயணித்தார். அவர் எருசலேமுக்குத் திரும்பிவந்து, பென்யமீன், லேவி கோத்திரங்களைத் தவிர மற்றவர்களின் எண்ணிக்கையை தாவீதிடம் ஒப்புவித்தார்.

**பென்யமீன் மற்றும் லேவி கோத்திரங்கள் கணக்கெடுக்கப்படவில்லை**

ஆசாரிய கோத்திரமான லேவி, இராணுவத்திற்காக அல்லது அரசியலுக்காக இலக்கம் பார்த்தல் அவசியமில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் பென்யமீன் கோத்திரத்தை ஏன் எண்ணவில்லை?

இதற்கான விளக்கத்தை 1 நாளாகமம் 21:6-ஆம் வசனம் தருகிறது. "ஆனாலும் ராஜாவின் வார்த்தை யோவாபுக்கு அருவருப்பாயிருந்தபடியினால், லேவி பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களை அவர்களுடைய இலக்கத்திற்குட்பட எண்ணாதேபோனான்." இலக்கம் பார்ப்பதை யோவாப் முற்றிலும் எதிர்த்ததினால், கொடுக்கப்பட்ட வேலையை அவர் முழுமையாக நிறைவேற்றவில்லை.

அதன் விளைவாக தவறு செய்துவிட்டோம் என்று தாவீது உணர்ந்தார். "தாவீது தேவனை நோக்கி: நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன்; இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; வெகு புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்" (1 நாளாகமம் 21:8). துரதிர்ஷ்டமாக, தான் செய்த கிரியைகள் பாவமானது என்று தாவீது உணருவதற்குக் கிட்டத்தட்ட பத்து மாதங்களானது. தாவீது தன்னுடைய தண்டனையைத் தேர்வு செய்வதற்குத் தேவன் அனுமதித்தார். மூன்றுவிதமான தண்டனைகள், வேறுப்பட்ட கால பகுதிகளும், தேவனுடைய தீர்க்கதரிசியான காத் அவருக்கு அறிவித்தார்.

(1) மூன்று வருடங்கள் பஞ்சம்.

(2) மூன்று மாதம் எதிரிகளிடமிருந்து தப்பி ஓடுதல்.

(3) மூன்று நாள் கொள்ளை நோய். "மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள் என்று கர்த்தர் உரைக்கிறார். இப்போதும்

என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோகவேண்டும் என்பதை யோசித்துப்பாரும் என்றான்." (1 நாளாகமம் 21:12)

அவருடைய இருதயத்தின் உண்மையான நிலையைக் குறிப்பிடும்படியாக, இஸ்ரயேலின் இன்னல்களில் களிகூரும் தன்னுடைய எதிரிகளைக் காட்டிலும் தேவன் இரக்கமுள்ளவர் என்பதை தாவீது உணர்ந்து, அவருடைய கரத்தில் விழுவதே நலமாய் இருக்குமென்று சொல்லி தாவீது மூன்றாவதைத் தெரிந்து கொண்டார். இராஜாவாகிய தனக்கே எந்தவிதமான பாதுகாப்பைத் தரக்கூடாத ஒரு தண்டனையை தாவீது தேர்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

**தாவீதிடமிருந்து பாடங்கள்**

தாவீதின் பாவங்களுக்கு அவர் பிரதிபலித்த விதத்திலிருந்தும் அவர் பெற்ற தண்டனையின் விளைவினாலும் நமக்கு எப்படிப்பட்ட பாடங்களைச் சேகரிக்கலாம்?

(1) அவர் தன்னுடைய பாவங்களைத் தாழ்மையோடு அறிக்கையிட்டார்.

(2) தேவனுடைய மன்னிப்புக்காக உண்மையோடு ஜெபித்தார்.

(3) அவர் பெற்ற தண்டனை அவருடைய தனிப்பட்ட உடல் நலத்தைப் பாதிக்காவிட்டாலும், அவர் அடிகள் வாங்கும்வரையில் அமைதியாக நிற்கவில்லை. "ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி: இதோ, நான் தான் பாவஞ்செய்தேன். நான்தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்ன செய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம்பண்ணினான்." (2 சாமுயேல் 24:17) என்று அவர் கூறினார்.

(4) தன்னுடைய கிரியைகளுக்காகத் தானே பொறுப்பெடுத்துக் கொண்டார்.

(5) தேவனுடைய இரக்கத்திற்காக தன்னையே விட்டு விட்டார். அவர் பெறக்கூடிய தண்டனையை அவர் தடுக்கவும் இல்லை அவர் தம்முடைய கிரியைக்காக நியாயம் கற்பிக்க முயற்சிக்கவும் இல்லை. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும்: என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்" (யோபு 13:15) என்று சொன்ன யோபின் இருதயத்தை தாவீது பெற்றிருந்தார்.

**அதன் விளைவாக இஸ்ரயேல்**

"கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது; இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டான்" (2 சாமுயேல் 24:1). மேலோட்டமாகப் பார்க்கையில் ஒரு மனுஷனுக்காக ஒரு தேசமே வேதனைப்படுவது நியாயமாகத் தோன்றவில்லை. ஒரு மனுஷனாகிய ஆதாமினால், முழு மனுக்குலமும் விழுந்துபோனதை இச்சம்பவம் நினைவுப்படுத்துகிறது. ஆனால், ஒரு இராஜா ஆட்சி செய்யும்போது ஏற்படும் அதிருப்தியான விளைவுகளைக் குறித்து தேவன் முன்னதாகவே ஜனங்களை எச்சரித்திருந்தார். (1 சாமுயேல் 8:10-13)

ஆயினும் இதைக் குறித்து ஒரு குறிப்பை 2 சாமுயேல் 24:1-ஆம் வசனத்தில் காணலாம். அதில், "...தேவனுடைய கோபம் "மீண்டும்" இஸ்ரயேலின் மேல்...." என்று வாசிக்கிறோம். ஒருவேளை, "தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது; அப்பொழுது தாவீது கர்தருடைய சமுகத்தில் விசாரித்தான். கர்த்தர்: கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று என்றார்" (2 சாமுயேல் 21:1). இதினிமித்தமாக மூன்று வருடம் பஞ்சம் ஏற்பட்டதை, " மீண்டும் " என்ற வார்த்தைக் குறிப்பிட்டிருக்கலாம். ஜனங்கள் அறியாமையில் இருக்கவில்லை. தொடர்ந்து தேவனுடைய வழிநடத்துதலைக் காண்பதைத் தொலைத்துவிட்டனர். இதில் அப்சலோமின் புரட்சியும் மற்றும் பிக்ரியின் குமாரன் சேபாவின் (2 சாமுயேல் 20) புரட்சியும் உள்ளட்டக்கப்பட்டுள்ளது (2 சாமுயேல் 15). ஜனங்களின் குறிப்பான பாவங்கள் சொல்லப்படாமல் இருந்தாலும், தேவனுடைய தண்டனையின் நியாயமான காரணங்களின்மேல் நமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

**போரடிக்கும் களம்**

போரடிக்கும் களம், நியாயத்தீர்ப்புக்கும், சோதனைக்கும் அடையாளமாக இருக்கிறது. (எடுத்துக்காட்டுகளுக்கு ஓசியா 9:2 மற்றும் எரேமியா 51:33-ஆம் வசனங்களைக் காணவும்). ஆனால் தேவனுக்குச் செலுத்தப்படும் காணிக்கையும் இந்தப் போரடிக்கும் களத்தில் ஏறெடுக்கப்படலாம். தேவனுக்கு ஏறெடுக்கும் ஒரு காணிக்கையைப் போரடிக்கும் களத்தில்தான் செலுத்த வேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது (எண்ணாகமம் 15:20, 18:27). சபை போரடிக்கும் களம் என்று ஏசாயா 21:10-ஆம் வசனத்தில் விவரிக்கப்படுகிறது.

சபை போரடிக்கும் ஸ்தலத்தோடு தேவனுக்கு காணிக்கைகளை ஏறெடுக்கும் ஸ்தலத்தையும், இணைக்கிறது. இக்காரியம் ஓர்னானின் குறிப்பிட்டச் சொத்துக்கு மிகவும் பொறுத்தமாகவும் உள்ளது. இப்போது அந்த இடத்தை தேவனுக்கு பலி செலுத்தவும், ஆராதனைச் செய்வதற்கும் தாவீது விலைக்கு வாங்குவார். குறிப்பான இந்த இடத்தில் (மோரியா மலை) தேவன் ஈசாக்கை பலி செலுத்தும்படிக்கு ஆபிரகாமை வழி நடத்தினார் (ஆதியாகமம் 22:2). வெகு சீக்கிரத்தில் சாலொமோனின் மிகப் பெரிய ஆலயம் அதே இடத்தில் கட்டப்படும் (2 நாளாகமம் 3:3). பல நூற்றாண்டுகளுக்குப் பின், இயேசுவும் அவ்விடத்தில் போதித்தார்.

சாமுயேலின் குறிப்பேட்டில் (24-ஆம் அதிகாரம்) அந்தக் களத்தின் உரிமையாளரின் பெயர் ஆர்னா (Araunah) என்று எழுதப்பட்டுள்ளது. அவர் ஒரு எபூசியராக அதாவது அக்காலத்தில் எருசலேமில் வாழ்ந்த ஒரு இனத்தாராக இருந்தார். நாளாகமத்தில் அவரை ஓர்னான் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஒருவேளை ஓர்னான் அவருடைய எபிரெய நாமமாகவும், ஆர்னா என்பது அவருடைய ஏபூசிய அல்லது கானானிய நாமமாகவும் இருந்திருக்க வேண்டும். (Jamieson, Faussett & Brown)

தாவீது தன் கண்களை வானத்திற்கு ஏறெடுத்துப் பார்த்தப்போது, தேவதூதனைப் பார்த்தார்- "தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின் பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் கண்டான்; அப்பொழுது தாவீதும் மூப்பர்களும் இரட்டுப் போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுந்தார்கள்" (1 நாளாகமம் 21:16). இந்த வாதை தாவீதுக்கு ஆழந்த வருத்தத்தை ஏற்படுத்தியது (2 சாமுயேல் 24:17). ஓர்னான் மற்றும் அவருடைய நான்கு குமாரர்களும் அந்த தூதனை கண்டார்கள். அவருடைய குமாரர்கள் மறைந்துகொண்டனர். ஆனால் தாவீதும் மற்ற மூப்பர்களும் தங்களுடைய முழுமையான மனம் வருந்துதலை வெளிப்படுத்தும்படியாக முன்னதாகவே இரட்டுப் போர்த்திக்கொண்டு முகம் குப்புற விழுந்தார்கள். தான் செய்த பாவத்திற்காக ஜனங்கள் அல்ல தானே தண்டிக்கப்பட வேண்டுமென்று தாவீது தேவனிடம் மன்றாடினார்.

ஓர்னானின் களத்தில் ஒரு பலிபீடத்தை தாவீது கட்ட வேண்டும் என்று தேவன் காத் என்ற தீர்க்கதரிசியின் மூலம் கூறினார். தாவீது உடனடியாகக் கீழ்ப்படிந்து ஓர்னானிடம் அந்தக் களத்தை விலை பேசினார். ஓர்னானோ, தாராள மனதுடையவராக, அந்தக் களத்தை மட்டுமல்ல, பலி செலுத்தக், கட்டைகளையும், காளைகளையும், போஜன பலிக்கான கோதுமையையும் இலவசமாக எடுத்துக் கொள்ளும்படிக்கு வேண்டிக்கொண்டார். ஆனால் தாவீது, முழு கிரயத்தைக் கொடுத்து அந்தக் களத்தை வாங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் தாமே செலவுகளை ஏற்றுக்கொள்ளாமல், தகனபலியைச் செலுத்த சம்மதிக்கவில்லை.

இயேசுவின் ஈடுபலி முழுமையானதும், விலையேறப்பெற்றதும், அற்புதமானதுமாக இருந்ததை நமக்கு நினைப்பூட்டுகிறது. இந்தப் பலி உலகத்திலுள்ள எல்லாப் பாவிகளின் மரணத்தையும் இறுதியாக முடிவுக்குக் கொண்டுவரும். பாவம், சிந்திக்க இயலாத அளவுக்கு அதிகமான பாதிப்புகளை எப்போதும் ஏற்படுத்தும். ஜனங்களை இலக்கம் பார்க்க வேண்டுமென்ற தாவீன் தீர்மானம் எண்ணிக்கையில் அடங்காத குடும்பங்களின் மரணத்திலும் துக்கத்திலும் முடிவடைந்தது. மற்றும் இனி பிறக்க வேண்டிய சந்ததிகள் வெட்டப்பட்டது. ஈடுபலியின் அடையாளமாக ஆபிரகாம், ஈசாக்கோடு நடந்த சம்பவத்தின் அதே இடத்தில், ஒப்புரவாகுதலும், மன்னிப்பும் ஏற்படும் என்பதை நாம் இஸ்ரயேலில் நடந்த இந்த விளைவுகளைப் பார்க்கும்போது ஆச்சரிப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அங்கு தாவீது ஒரு பலிபீடத்தைக் கட்டி யேகோவா தேவனுக்கு தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தினார். பலிபீடத்தின் மேலிருந்த தகனபலிக்கு, அக்கினியினால் தேவன் பதில் அளித்தார். (1 நாளாகமம் 21:26)

வசனங்களின் அடிப்படையில், தகன பலிகள் ஈடுபலியைக் குறிப்பிடும். எடுத்துக்காட்டாக, அந்தி சந்தி பலிகள், காலை 9.00 மணிக்கும், மாலை 3.00 மணிக்கும் செலுத்தப்பட்டது. இது இயேசு சிலுவையில் தொங்கின மணி நேரங்களுக்கு ஒத்திருக்கிறது. ஒரு தனிப்பட்ட இஸ்ரயேலன் பலி செலுத்துவதற்குக் கொண்டுவரப்படும் ஒரு தகன பலி- ஒருவர் ஈடுபலியைக் கண்டு புரிந்துகொள்வதைச் சித்தரிக்கும். தகன பலி எப்பொழுதும் நேரடியாக கட்டடைகளின்மேல் அடுக்கி வைக்கப்படுவது சிலுவையைச் சித்தரிக்கும். ஒருவர் சமாதான பலியைச் செலுத்தும்போது, முன்னதாகவே எரிந்துகொண்டிருக்கும் தகன பலியின்மேல் எப்போதும் வைக்கப்படும். தேவனோடு ஏற்படுத்தப்படும் எந்தவிதமான சமாதானத்திற்கும் ஈடுபலியே அடிப்படையானது என்பதை இது சித்தரிக்கிறது. தாவீது தேவனோடு நல்லுறவை

மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதற்காக இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியமமாக இருந்தது.

"தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறைபொன்னை ஒர்னானுக்குக் கொடுத்து" (1 நாளாகமம் 21:25). ஒருவேளை இந்த விலை 6000 வருடம் பாவம் மற்றும் மரணத்திற்கும் ஒப்புரவாகச் செலுத்தப்படும் கிரயத்தை அடையாளப்படுத்தக்கூடும். சங்காரத்தை நிறுத்தும்படி தேவன் கட்டளையிட்டார். தேவனுடைய இரக்கத்தினால், எருசலேம் இரட்சிக்கப்பட்டது. ஆனால் அந்த இரக்கத்திற்கு அப்போதும் இப்போதும் ஒரு பலி தேவைப்பட்டது.

**ஆலயத்தின் இட அமைப்பு**

அந்நேரத்தில், எருசலேமுக்கு வட மேற்கில், எட்டு மைல் தொலைவிலுள்ள கிபியோனில் இருக்கும் ஆசாரிப்புக்கூடாரத்தில் சகல பலிகளும் செலுத்தப்பட்டது. ஆனால், "அப்பொழுது தாவீது: தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே; இஸ்ரவேல் பலியிடும் சர்வாங்க தகனபலிபீடம் இருக்கும் ஸ்தலமும் இதுவே" (1 நாளாகமம் 22:1) என்று அறிவித்தார். அவரைத் தொடர்ந்துவரும் அவருடைய குமாரனாகிய சாலொமோன் அவ்விடத்தில் ஆலயம் கட்டுவதற்கான ஆயத்தவேலைகளை தாவீது துவங்கினார்.

தேவனுடைய இருப்பிடம் எவ்வாறாக தேர்வு செய்யப்பட்டது என்ற வரலாற்றைக் கொடுப்பதோடு, இந்த வியக்கத்தக்க சம்பவம் முடிவுக்கு வந்தது. இந்நாள் வரைக்கும்கூட பல தலைமுறைகளுக்கு இது ஒரு புனித ஸ்தலமாக உள்ளது. ஒருவேளை இராஜ்யத்தில் இந்த ஸ்தலம், கற்றுக்கொள்வதற்கும், பிரதிபலிப்பதற்கும், அர்ப்பணிக்கப்பட்ட ஸ்தலமாக இருக்கலாம். அதே இடத்தில் ஆலயம் மீண்டும் கட்டப்படும் என்று பலர் நம்புகிறார்கள். தாவீது தம்முடைய பாவங்களிலிருந்து மீண்டு வந்தபோதும், அவர் பாவத்தின் விளைவாக, அவரைச் சுற்றியுள்ள அகேருக்கு ஏற்பட்ட கடுமையான துன்பங்களினால், அவருக்கு ஏற்பட்ட மன தேவனையான அனுபவங்களால், நாம் அதிகமான காரியங்களைப் புரிந்துகொள்கிறோம். நம்முடைய இருதயத்திலுள்ள ஆழமான நோக்கங்களின்மேல் எப்போதும் கவனமாக இருந்து அவைகள் கேள்விக்கு இடம் வைக்கும்போது, உடனடியாக, உண்மையோடு மன்னிப்பைக் கேட்க வேண்டுமென்ற பாடத்தை இக்காரியம் நமக்குக் கற்றுத்தருகிறது. நாம் ஒரு சூழ்நிலையைக் காண்பதைக் காட்டிலும் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வாய்ப்பைப் பெறும் சகோதரர்களின் கனிவான ஆலோசனைகளை, உடனடியாக ஏற்றுக்கொள்ளுமளவுக்கு நம்முடைய உணர்வுகள் எப்போதும் விழித்திருக்க வேண்டும். பாவத்திற்கான ஒப்புரவாகுதல், பாவத்தின் விளைவுகளைத் தவிர்க்காது அல்லது தடுக்காது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். எருசலேம் மீட்கப்பட்டதைக் கண்டோம். இப்போது நேசிக்கப்பட்ட இந்த நகரம் தேவனுடைய மகிமையான இராஜ்யத்தின் தலைநகரமாக எப்போது மாறும் என்று நாம் எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறோம். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3)

தாவீதை ஒரு சிறந்த முற்பிதாவாக மாறுவதற்கும் இந்த அனுபவம் அவருக்கு உதவியாக இருந்திருக்கும் என்பதை நாம் அனுமானிக்கலாம். ஒருவேளை உயிர்த்தெழும் இந்த உலகத்தின் தலைவர்கள், குருட்டுத்தனமாக பேராசையையும், சுய நம்பிக்கையைச் சார்ந்திருப்பதையும் மேற்கொள்வதற்கான பாடங்களை தாவீது கற்றுக்கொடுக்கலாம். யேகோவா தேவன்மேல் நம்பிக்கை வைப்பதன் முக்கியத்துவத்தையும், அவருடைய உயர்வான படிநிலையையும் அவர்கள் அவசியமாகக் காண வேண்டும்.

இறுதியாக, எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய முழு நம்பிக்கையை நம்முடைய சொந்த திறமைகள் அல்லது நம்முடைய ஆதாரங்கள்மேல் வைக்காமல், தேவன் பேரில் வைக்க வேண்டுமென்ற பாடத்தை இது நமக்குக் கற்றுத்தருகிறது. "அவருடைய கிருபை எனக்கு போதும்" என்று நம்முடைய முழு இருதயத்தில் முழுமையாகச் சொல்லுவோமாக.



# சாலொமோன் ஆலயத்திலிருந்து பாடங்கள்

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரிந்தியர் 3:16)

இஸ்ரயேலின் வரலாறு, புது சிருஷ்டிக்கு அநேக அற்புதமான பாடங்களைக் கொடுத்திருக்கிறது. பெரிதான நிஜங்களைக் குறிப்பிடுவதற்கு, தேவன் பழைய இஸ்ரயேலை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதற்கு, சாலொமோனின் ஆலயம் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. பண்டைய காலத்தில், இந்த ஆலயம் ஒரு சிறந்த, அழகுள்ள கட்டமைப்பாக இருந்தது. இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கான மூல பொருட்களை தாவீது இராஜா தாமே சேகரித்தார். அந்தப் பரிசுத்த கட்டமைப்புக்காக தேவைப்பட்ட திட்டங்களை தேவன் கொடுத்தார் என்பது தெளிவாகத் தெரிக்கிறது.

### பவுலின் குறிப்புகள்

ஆலயத்தைப்பற்றிய அடையாளத்தைக் குறித்து, நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் விரும்புகிறார் (1கொரிந்தியர் 3:17; எபேசியர் 2:21). அது சபையை அடையாளப்படுத்தும் என்று அவர் தெளிவாகக் கூறினார். பவுலின் வாழ்க்கை காலத்தில் ஆலயம் என்றாலே, மனதுக்கு வருவது-ஏரோதின் ஆலயம். ஆனால் அந்த ஆலயம், சாலோமோனின் ஆலயம் கட்டப்பட்டு நீண்ட நாட்களுக்கு பின் கட்டப்பட்டது. மேலும் அதே அளவிளான முக்கியத்துவத்தையும் அதற்குக் கொடுக்கப்படவில்லை என்று எபிரெய நிருபத்தில் கூறப்படுகிறது.

### சாலொமோனின் ஆலயத்தின் வர்ணனை

சாலொமோனின் ஆலயத்தைக் குறித்து வேதாகமம் இரண்டு முக்கியமானக் குறிப்புகளைத் தருகிறது. 1 இராஜாக்கள் 5 முதல் 8 அதிகாரங்களும், 2 நாளாகமம் 2 முதல் 7 அதிகாரங்கள். இந்த விவரங்கள் மெய்சிலிர்க்க வைக்கிறது. ஆனால் கட்டிடக் கலையின் நிலையிலிருந்துப் பார்க்கும்போது, ஆலயம் உருவானதைப்பற்றி புரிந்துகொள்வதற்கு மேலே கூறப்பட்ட விவரங்கள் போதுமானதாக இல்லை. உண்மையில் கல்விமான்கள் மற்றும் கட்டிடக் கலை வல்லுனர்கள் விரிவான பல்வேறு வடிவமைப்புகளைக் கொடுத்தாலும், துல்லியமான விவரங்களை நாம் திருப்தியாகப் பெறவில்லை என்று கருதுகிறார்கள். ஆனால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், புது சிருஷ்டிக்குத் தேவையானப் பாடங்களைத் தந்துள்ளது.

இஸ்ரயேலைப் பொறுத்தவரையில், யேகோவா தேவன் இரண்டு இடங்களில் வாசம் செய்தார். ஒன்று ஆசரிப்புக்கூடாரம் மற்றொன்று ஆலயம். சில அடிப்படையானக் குறிப்புகளைக் கீழே காணலாம்.

(1) பழங்காலத்து ஆசரிப்புக்கூடாரம் யேகோவா தேவனுடைய தற்காலிகமான வாசஸ்தலத்தை அடையாளப்படுத்தியது. இங்கு அவர் இஸ்ரயேலரோடு தொடர்புக்கொண்டார். ஆனால் ஆலயம் என்பது அவருடைய முழுமையான ஆவிக்குரிய குடும்பத்தோடு அவர் வாசம் செய்யும் நித்தியமான வாசஸ்தலத்தை அடையாளப்படுத்துகிறது.

(2) இந்த இரண்டு கட்டமைப்புகளும் சபையின் இரண்டு நிலைகளை அடையாளப்படுத்துகிறது. (a) ஆசரிப்புக்கூடாரம், இப்போது மாம்சத்தில் இருக்கிறதும், **ஆவியினால் கருத்தரிக்கப்பட்டு** மண்பாண்டங்களில், புது சிருஷ்டியாகிய பொக்கிஷத்தைப் பெற்றிருக்கும் நிலையிலுள்ள சபையை அடையாளப்படுத்துகிறது (2 கொரிந்தியர் 4:7, 5:17). (b) ஆலயம், வருங்காலத்தில் **ஆவியில்** முழுமையாகப் பிறந்த சபையின் நிலையைச் சித்தரிக்கிறது. அந்நிலையில் அவள் ஆவிக்குரிய சரீரத்தையும் தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருப்பாள் (1 கொரிந்தியர் 13:10; 2 பேதுரு 1:4). (சகல மகிமைகளும் மறைக்கப்பட்டிருந்த தாழ்மை நிறைந்த ஆசரிப்புக் கூடாரம்-இக்காலத்தில் தேவன் தம்முடைய ஜனங்களோடு இருக்கும் அவருடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்துகிறது. அதேநேரத்தில் மகிமையான ஆலயம், கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியிலுள்ள மகிமையடைந்த சபையை அடையாளப்டுத்துகிறது. (R1237)

"தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறபோது, அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், நான் கேதுருமர வீட்டிலே வாசம்பண்ணுகிறேன்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியோ திரைகளின்கீழ்

இருக்கிறது என்றான். அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும்; தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான். அன்று ராத்திரியிலே, தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்: நீ போய், என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம். நான் இஸ்ரவேலை வரப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம் பண்ணாமல், ஒரு கூடாரத்திலிருந்து மறு கூடாரத்துக்கும், ஒரு வாசஸ்தலத்திலிருந்து மறு வாசஸ்தலத்துக்கும் போனேன். நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தையும் ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள் முதல் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கவும் அவர்களை நாட்டினேன். உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன். அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன். நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும் இந்த எல்லாத் தரிசனத்தின் படியும் தாவீதுக்குச் சொன்னான்." (1 நாளாகமம் 17:1

5, 9, 10, 12, 15)

### இந்தப் பகுதியிலிருந்து முக்கியமான குறிப்புகள்

(1) தாவீது ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. (2) காலபோக்கில் யேகோவா தேவன் இஸ்ரயேலை அசையாமல் நிலைநாட்டுவார். (3) யேகோவா தேவன் தாவீதுக்கென்று ஒரு வீட்டைக் கட்டுவார். (4) தாவீதின் வித்து, தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவார். (5) தாவீதின் வித்து அவருடைய சிங்காசனத்தை நித்தியமாக ஸ்தாபிப்பார்.

இயல்பான கேள்வி என்னவெனில், "தாவீது ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படாததன் காரணம் என்ன? "இதற்கான பதில் யேகோவா தேவனிடமிருந்து வருகிறது. "ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்." (1 நாளாகமம் 28:3)

தாவீதின் ஆளுகையில், பல யுத்தங்கள் நடத்தப்பட்டு இரத்தம் சிந்தப்பட்டது, ஆகவே அவர் ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆலயம் யுத்தத்தோடு அல்ல சமாதானத்தோடு சம்மந்தப்பட்டதாக உள்ளது. கீழ்க்காணும் வசனப் பகுதியில் இந்தக் காரியங்கள் குறிப்பாகக் காணப்படுகிறது. இதில் தாவீதின் ஆளுகையில் யுத்தங்களுக்கும், சாலொமோன் ஆட்சியில் இருந்த சமாதானத்திற்குமுள்ள வேறுபாட்டை இது காட்டுகிறது. "சாலொமோனை நோக்கி: என் குமாரனே, நான் என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட என் இருதயத்தில் நினைத்திருந்தேன். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி: நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய். இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையையும் அருளுவேன். அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன் என்றார். இப்போதும் என் குமாரனே, நீ பாக்கியவானாயிருந்து, கர்த்தர் உன்னைக்குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி, அவர் உன்னுடனேகூட இருப்பாராக." (1 நாளாகமம் 22:7-11)

### தாவீது மற்றும் சாலொமோனிடமிருந்து பாடங்கள்

தாவீது மற்றும் சாலொமோன் ஆட்சிகளிலிருந்த வேறுபாடுகளுக்குள் அற்புதமான அடையாளச் செயல்கள் உள்ளது. இராஜாவாகிய தாவீதின் ஆட்சி சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது. ஏனெனில் தாவீதை போல,

- உலகம், மாம்சம், சாத்தானோடு சபை போராடிக்கொண்டிருக்கிறது.
- சபை இன்னும் சமாதானம் பெறவில்லை,

- சுவிசேஷ யுகம் ஒரு பலியின் யுகம்-இரத்தம் சிந்தப்பட்டுக்கொண்டிருக்கிறது,

இராஜாவாகிய சாலொமோனின் ஆட்சி, ஆயிரவருட ஆட்சியை அடையாளப்படுத்துகிறது, ஏனெனில் சாலோமோனை போல,

- சபை மகிமையடைந்து சமாதானத்தோடு இளைப்பாறும்.
- இயேசு மற்றும் சபையின் ஆளுகையின் பலனாக, இந்த உலகத்தில் ஆசீர்வாதங்கள் வழிந்தோடும்.
- இந்த உலகம், ஆளுநர்களை பயபக்தியுடன் மதிப்பார்கள். (கிறிஸ்து-இராஜாக்களும், ஆசாரியர்களும்)
- சாலொமோன் என்ற பெயருக்கு "சமாதானம்" என்று பொருள். ஆகவே ஆயிர வருட ஆட்சி இந்த உலகத்திற்குச் சமாதானத்தைக் கொண்டுவரும்.

**மூலப்பொருட்களும், தொழிலாளிகளும்**

சாலொமோனின் ஆட்சி துவங்குவதற்கு முன்பதாகவே, ஆலயம் கட்டுவதற்கானப் பொருட்கள் சேகரிக்கப்பட்டது. மகிமையுள்ள ஆட்சிக்கு முன்பாக, சபையின் ஆயத்தத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

இஸ்ரயேல் அல்லாத "அந்நியர்களும்" ஆலயப் பணியின் ஆயத்த வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்ற குறிப்பு ஆர்வமூட்டுகிறதாக உள்ளது. "பின்பு தாவீது இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற அந்நியஜாதியாரைக் கூடிவரச்செய்து, தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கான கல்லுகளை வெட்டிப் பணிப்படுத்தும் கல்தச்சரை ஏற்படுத்தினான்." (1 நாளாகமம் 22:2)

இஸ்ரயேல் அல்லாத அந்நியர்கள் பங்கேற்றதுபோல சபையை ஆயத்தப்படுத்தும் வேலைகளில், இந்த உலகம் முக்கியமான பங்கைப் பெற்றுள்ளது. இந்த உலகத்தின் அந்நியர்கள், கடுமையான சோதனைகளின் பிறப்பிடமாக உள்ளனர். இந்தச் சோதனைகள் நம்மைச் "செதுக்குகிறது." நம்முடைய குணங்களை வடிவமைத்து, நாம் பரலோக பிதாவின்மேல் வைத்திருக்கும் நம்முடைய விசவாசத்தையும், உத்தமத்தையும் அன்பையும் செயலாற்றுவதற்கான வாய்ப்புகளைத் தருகிறது. மேலும் நிழலான தாவீதாகிய இயேசுவின் அனுபவங்களின் மதிப்பைப் புரிந்துகொண்டு, கிறிஸ்துவைப்போல குணங்களை நமக்குள் உருவாக்கத் தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்கு, இந்தப் பலதரப்பட்ட அந்நியர்களை ஒன்றாகக்கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறார். பரிசுத்தவான்கள் வளர்ச்சியடைவதற்கு, அவர்களின் வெறுப்பு, பகை, கொடூரங்கள் உதறித்தள்ளப்படுகிறது. இந்தக் கோட்பாடு கீழ்க்காணும் குறிப்புகளில் நிரூபணமாகிறது.

•"என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள். " (1 யோவான் 3:13)

•"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." (1 பேதுரு 4:12, 13)

•"இக்காலத்தில் ஆண்டவரைப் பின்பற்றக்கூடியவர்கள் நீதியினிமித்தம் துன்பப்படுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள், அது நியாயம் என்பதற்காகவோ, சரியா என்பதற்காகவோ அல்ல, மாறாக தம்முடைய ஜனங்களைச் சோதித்து, நிரூபித்து, மெருகேற்ற விரும்பி, ஆண்டவர் தீமையை மனமுவந்து அனுமதித்தார்..... வளமுடன் வாழ்வதற்கான தடைகள், உபத்திரவங்கள் மற்றும் அவரைச் சேர்ந்த "அங்கத்தினர்களை" எதிர்த்து.... இப்படியாக, வருங்கால வேலைகளுக்கு, ஊழியம் செய்வதற்காக தேர்வு செய்யப்பட்டவர்களை ஆயத்தப்படுத்துகிறார். இவ்வாறாக, தலையை உபத்திரவப்படுத்தினவர்கள், சரீரத்தையும் உபத்திரவப்படுத்தி , அவர்களே சந்தேகிக்காத வண்ணம், தேவனுடைய தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவதில் முழு ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்கள் (R4813). (உண்மையான ஆலயப் பணியில் 153,600 அந்நியர்கள் வேலை செய்ததாக 2 நாளாகமம் 2:17, 18 வசனங்கள் குறிப்பிடுகிறது. இவர்களில் 70,000 பேர் பொதுவான தொழிலாளிகளும் 80,000 பேர் திறமையான தொழிலாளிகளும், 3600 பேர் மேற்பார்வையாளருமாக இருந்தார்கள். இந்த எண்களில், இன்னும் பாடங்கள் இருக்கக்கூடும்.)

**கற்கள் ஆயத்தப்படுத்தல்**

ஆலய கற்களைச் செப்பனிடுவதைப் பொறுத்தவரையில் ஆர்வமூட்டும் ஓர் உண்மையை நாம் 1 இராஜாக்கள் 6:7-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். "ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள்

வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை."

ஒவ்வொரு சபையின் அங்கத்தினரும் திரைக்கு அப்பால் செல்லும்போது ஆலய வகுப்பாரின் அவருக்கான இடம் நிறைவடையும் என்ற பாடம் இதில் உள்ளது. இனி எந்த ஒரு செதுக்கலும், சீர்பொருந்துதலுக்கும் அவசியமில்லை. ஒவ்வொரு தனிப்பட்ட நபருடைய ஆயத்தமாக்கப்பட்ட பணிகளும், பிரதிபலிக்கும்படியாக அவரவருக்கு வேலைகள் நியமிக்கப்படும்.

### இரண்டு தூண்கள்

ஆலயத்தின் முக்கியமான அம்சத்தில் ஒன்றைக்குறித்து 1 இராஜாக்கள் 7:15-22-ஆம் வசனம் விவரிக்கிறது. ஒருவர் ஆலயத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்புறத்திலிருந்து செல்லும்போது, ஆலய வாசலுக்கு இருபக்கங்களிலும் இரண்டு பிரமாண்டமான தூண்களைக் காணலாம். இந்தத் தூண்கள் விநோதமாகப் பெயரிடப்பட்டிருந்தது. ஆலயத்தின் வலது பக்கத்தில் இருக்கும் தூணுக்கு **யாகீன்** என்றும் இடது பக்கம் இருக்கும் தூணுக்கு **போவாஸ்** என்றும் பெயரிடப்பட்டது.

ஆலயம் ஆயிர வருட ஆட்சியில் மகிமையுள்ள கிறிஸ்துவை அடையாளப்படுத்துவதினால், இந்த இரண்டு முக்கியமான தூண்களும் இராஜ்யத்தின் வேலைகளில் ஏதோ சில அம்சங்களை அடையாளப்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இந்த இரண்டு தூண்களும், இந்த உலகம் கிறிஸ்துவை அடையாளம் கண்டுகொள்ளும்படியான சில முக்கியமாக குணங்களை அடையாளப்படுத்தக்கூடும் என்ற ஒரு நியாயமான கருத்து முன் வைக்கப்படுகிறது. உண்மையில் இயேசு மற்றும் சபை இந்த உலகத்திற்குப் புலப்படமாட்டார்கள். ஆனால் ஒவ்வொருவரும் மனதில் தோன்றும் உணர்வுகளைப் புரிந்துகொள்வார்கள். ஆயினும், முற்காலத்தில் இந்தப் பரிசுத்தவான்கள் மாம்சத்தில் அவர்களிடத்தில் இருந்ததை இந்த உலகம் நினைவுகூரும்.

உண்மையில் செம்பு, பரிபூரணமான மனுஷ தன்மையை அடையாளப்படுத்தும். இந்த இரண்டு தூண்களும் செம்பினால் (வெண்கலம் என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) செய்யப்பட்டது. மாம்சத்திலிருக்கும்போதும் இந்தப் பரிசுத்தவான்கள் கனப்படுத்தப்பட்டார்கள் என்பதை இந்த உலகம் அடையாளம் கண்டுகொள்ளும். தேவனுடைய பார்வையிலிருந்து பார்க்கும்போது, அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டு பரிபூரணராக இருந்தார்கள். அந்தத் தூண்களின் மேலுள்ள அலங்கரிக்கப்பட்ட பூண்களில் (ornamental tops) கலைநுட்பமான மாதுளைகளையும், லீலி மலர்களும் காணப்பட்டது. அவர்கள் கனிகொடுக்கும் தன்மை தேவனால் முன்னதாகவே அறிந்து கொள்ளப்பட்டதை இந்த மாதுளைகளும், அவைகளின் அழகும், நறுமணமான குணங்களை லீலி மலர்களும் அடையாளப்படுத்துகிறது.

ஆலயத்தின் நுழைவாயை வடிவமைத்ததினால், நம்முடைய சிந்தையில் 87-ஆம் சங்கீதம் நினைவுக்கு வருகிறது. "ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை. சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார்." (சங்கீதம் 87:2, 3, 5, 6)

ஒருவேளை, ஆலயத்தின் நுழைவாயைத் தாங்கி நிற்கும் அந்த இரண்டு "தூண்களின்" நிலை "சீயோனின் வாசல்களுக்கு" அடையாளமாக இருக்கக்கூடும், தீர்க்கதரிசனமாக, இயேசு இந்த மாம்சத்தில் வாழும்போது எவ்வாறாக தூண்களைப்போல பலம் கொண்டவராகவும், இப்போது நிஜமான ஆலயத்தின் ஒரு பகுதியாக இருப்பவரையும் இந்த முழு உலகம் தேவனை ஆராதிப்பதற்கு இவர் வழியாகவே செல்ல வேண்டும் என்பதையும் இந்த உலகம் அடையாளம் கண்டுகொள்வதை இது குறிக்கலாம்,

"மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்." (வெளிப்படுத்தல் 21:3)

### ஒரு பெயரில் என்ன உண்டு?

வேதாகமத்திலுள்ள பெயர்களோடு, தொடர்புள்ள பல பாடங்களை வேத மாணவர்கள் கண்டுள்ளார்கள். அதுபோலவே இங்கும் காணலாம். யாகீன் என்ற பெயருக்கு "அவர் ஸ்திரமாக ஸ்தாபிப்பார்" என்று

பொருள். போவாஸ் என்ற பெயருக்கு "பலமுள்ள" என்று பொருள். இரண்டு பெயர்களுமே இயேசுவின் இராஜரீகத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. போவாஸ், யூதா இராஜாக்களின் முற்பிதாவாக இருந்தார். இராஜரீகத்தின் வழி நித்தியமாக ஸ்தாபிக்கப்படும் என்ற ஒரு வாக்குத்தத்தம் யாகீன் என்ற பெயருக்குக் கருதப்படுகிறது.

கூடுதலாக, ஆலயத்தின் இருபக்கங்களில் அமைந்துள்ள அந்த தூண்களுக்கு ஒரு ஆர்வமூட்டும் காரியம் உள்ளது. யாகீன் மற்றும் போவாஸ் என்ற பெயர்களுடன் மத்தியிலுள்ள ஆலயத்தைச் சேர்த்து வாசிக்கும்போது, கீழ்க்காணும் வரிகள் கருத்தில் கொள்ளப்படுகிறது. "பலமுள்ள-ஆலயம்-அவர் (தேவன்) உறுதியாக ஸ்தாபிப்பார்." இது அழகான வாக்குத்தத்தமாக ஆலய வகுப்பாருக்கு தேவனால் வடிவமைக்கப்பட்டது. மேலும் இவர்களுக்கு முழு வல்லமையும் அதிகாரமும் கொடுக்கப்படும்.

**ஆலய பிரதிஷ்டை**

ஆலயப் பிரதிஷ்டையைக்குறித்து 1 இராஜாக்கள் 8:62-64 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இராஜாவாகிய சாலோமோன் தாமே பலிகளைச் செலுத்தினார். ஆசாரியர்கள் மட்டுமே பலிகளைச் செலுத்த அதிகாரம் பெற்றிருந்ததினால், இது வழக்கத்திற்கு மாறாக இருந்தது. (அதற்குப் பின் வந்த இராஜாவாகிய உசியா, ஆலயத்தில் தூபம் காட்டுவதற்கு உள்ளே நுழைந்தபோது, அத்து மீறி உள்ளே நுழைந்ததினால் மீதியுள்ள அவருடைய ஆயுசு நாட்கள் முழுவதிலும் குஷ்டரோகியாக இருந்தார். (2 நாளாகமம் 26:16-19)

ஆயினும், தேவனுடைய முழு அங்கீகாரத்தோடு இராஜாவாகிய சாலொமோன் சமாதான பலிகளையும், தகனபலிகளையும் செலுத்தியிருக்கக்கூடும். ஆனால், விதிவிலக்கான இந்தக் காரியம் தீர்க்கதரிசனமான கண்ணோட்டத்தில் காண வேண்டும். சாலொமோன் இயேசுவையும், மகிமையுள்ள சபையையும் அடையாளப்படுத்துகிறதினால் இராஜ்யத்தில் ஜனங்களின் பலிகளை இயேசுவும் சபையும் அங்கீகரிப்பார்கள் என்ற உண்மை இங்கு எடுத்துகாட்டப்படுகிறது. இந்த விஷயத்தில் சாலொமோன் இராஜாவும் ஆசரியருமாயிருக்கிற மெல்கிசெதேக்குக்கு சமமாகிறார். உடன்படிக்கை அல்லது பொருத்தனைகளை ஏற்படுத்துவதோடு சமாதான பலிகள் செலுத்தப்பட்டது. (லேவியராகமம் 9:18-21) புது உடன்படிக்கை செயலாற்றப்படும் என்று இது குறிப்பிடுகிறது.

ஆயினும், சாலொமோன் எந்தவிதமான பாவநிவாரண பலிகளைச் செலுத்தவில்லை என்பது ஆர்வமூட்டும் காரியமாக இருந்தாலும், இது நிஜத்திற்கு முழுமையாகப் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. பாவ நிவாரண பலிகளுக்கான காலம் கடந்துவிட்டிருக்கும். நிஜமான சாலொமோனின் ஆலயம் மகிமையடைவதற்கு முன் பாவநிவாரண பலிகள் செலுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. சாலொமோன் செலுத்தின தகன பலிகள், போஜன பலிகள், சமாதானபலிகள், "சுய-விருப்பமுள்ள" பலிகளாக இருந்தது. கிறிஸ்துவின் மூலமாக யேகோவா தேவனுக்கு தங்களையே அர்ப்பணித்த உலக ஜனங்களை இவைகள் அடையாளப்படுத்துகிறார்கள்.

"அடுத்த யுகத்தில் உலகத்தின் ஆட்சி மாறினாலும், "அர்ப்பணிப்பு" அங்கும் ஒழுக்கமாக இருக்கும். இப்போது "மரணபரியந்தம்" அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம். ஆனால் வரக்கூடிய காலத்தில், அதற்குப் பதிலாக, "ஜீவன் வரைக்கும்" என்று சொல்லப்படும். ஏனெனில், தீமையின் ஆட்சி நிறைவுபெறும்போது, தீமை செய்கிறவர்களைத் தவிர வேதனை, துக்கம் மற்றும் மரணம் முடிவடைந்திருக்க வேண்டும். ஒருவருடைய வல்லமையை சுய-விருப்பத்தோடு ஒப்புக்கொடுப்பதே அர்ப்பணிப்பாகும். ஆகவே ஒப்புரவாகுதலின் நாளுக்குப்பின் செலுத்தப்படும் சில பலிகளை இது அடையாளப்படுத்துகிறது." (ஆசரிப்புக்கூடார நிழல்கள்)

இக்கால வாழ்க்கையில் செதுக்கப்பட்டு, மெருகேற்றப்பட்ட அனுபவங்களைப் பெற்ற தனி நபர்களின் பரிசுத்தமாக்கப்பட்ட குழுவினர், இந்த உலகத்தை ஆசீர்வதிக்கக்கூடிய மகிமையான வேலைகளுக்கு, இந்த ஆலயம் அழகான ஒரு நிழல். இந்த உலகம் சரியாக தேவனை தொழுதுகொள்வதற்கு இவர்கள் சரியாக ஆயத்தப்படுத்தப்பட்டிருப்பார்கள். அந்த ஆலய வகுப்பாரின் ஒரு பகுதியாக இருப்பதற்கு பெறக்கூடிய அழைப்பு எவ்வளவு மகத்துவமான சிலாக்கியம்! விசுவாசமுள்ளவர்களாக இருப்பதற்கு முயற்சிப்போம்.

# உலகின் சமுதாய நிலைப் புள்ளி விவர ஆய்வில் ஒரு மாற்றம்

"எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." (மத்தேயு 24:38, 39)

மிகச் சமீபமாக எடுக்கப்பட்ட உலகின் ஜனத்தொகை வெளிப்பாட்டின் படி, நம் கண்டத்தில் மக்களின் ஜனத்தொகை ஒவ்வொரு நிமிடமும் 145 ஆக அதிகரித்து வருகிறது. உலகளாவிய அழிவுகளைத் தவிர்த்து, அடுத்த பத்து வருடங்களில், இன்னும் நூறு கோடி மக்கள் இந்தப் பூமியில் இருப்பார்கள். ஆனாலும் ஏழு கண்டங்களுக்குள்ளே வேறுபாடுகள் இருக்கலாம். 2050-குள் ஆப்ரிக்காவின் ஜனத்தொகை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகையில், அதே கால சமயத்தில் ஐரோப்பாவின் ஜனத்தொகை குறையும் என்று எதிர்ப்பார்க்கபடுகிறது.

ஜனத்தொகையின் சமுதாய மற்றும் பொருளாதார போக்கைப்பற்றி (PWC) என்ற நிறுவனம், தனது 2015 உலகளாவிய ஆய்வில் சமீபத்தில் வெளியிட்டது. மக்கள் நிறைந்த இந்த உலகத்தில் வேற்றுமை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. சில நாடுகளில் வாழ்நாட்களின் எதிர்நோக்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. சில நாடுகளில் பிறப்பு சதவிகிதம் குறைந்துக்கொண்டே போகிறது. இவை இரண்டும் இணைந்து எதிர்கால உலகளாவிய சமுதாய புள்ளி விவர ஆய்விற்கு ஒரு சவாலாய் இருக்கிறது. எடுத்துக்காட்டாக அடுத்த 30 ஆண்டுகளில், ஜப்பான் மக்களின் சராசரி வயது 53-ஆகக்கூடும், மேலும் நைஜீரியாவின் சராசரி வயது 21 ஆகக் குறையும்.

ஐரோப்பா, ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா தங்கள் பணிகளைச் சமாளிக்க, பெண்கள், வயது முதிர்ந்தோர் மற்றும் மிக அதிகமான குடிபுகுவோர் தேவைப்படுவர். ஆப்ரிக்காவில் இருக்கும் இளைய தலைமுறையினருக்கு அந்தக் கனம் மிகுந்த வாய்ப்புகளை அளிக்கிறது. ஆனால் அங்கு திகழும் சமுதாய ஏற்றத்தாழ்வு மற்றும் அரசியல் ஊழல்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். நூறு ஆண்டுகளுக்கு முன்பாக பிரான்ஸ் நாட்டில் இருந்ததுபோல இன்னும் 30 வருடங்களில் சீனா, இந்தியா மற்றும் பிரேஸிலின் ஜனத்தெகை இருமடங்காகிவிடும்.

ஐரோப்பாவைப்போல வயது முதிர்ந்த ஜனத்தொகை இருக்கும் பகுதிகளில், நீடித்த நோய்களால் அவதியுறும் வயது முதிர்ந்தவர்களின் ஆரோக்கியத்திற்காகச் செலவுகள் செய்வதும் ஒரு பெரிய சவாலாக இருக்கிறது. 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்கெனவே 30% முதல் 40% வரை சுகாதாரத்திற்கானச் செலவுகள் செய்துவிட்டோம் என்று ஐரோப்பிய ஒன்றியங்கள் கூறுகின்றன. இன்னும் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டேபோனால், அவர்களைப் பராமரிக்கும் செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகும், அது சுகாதார அமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகளில் அழுத்தத்தை அதிகரித்துக்கொண்டேபோகும். அமெரிக்காவில் பார்வையாளர்கள், கனமான சமுதாய மாற்றங்களைக் கவனித்து வருகிறார்கள். கார்நெல் (cornell) பல்கலைக்கழகத்தில் மனித சமுதாய வளர்ச்சித் துறையில் பணிபுரியும் பேராசிரியர், டானியேல் லிச்டர் (Daniel Lichter) என்பவர் தனது பேட்டியில் கூறுகையில், உலகளாவிய முறையின்படி, அமெரிக்காவின் கூட்டமைப்பு ஒரு பெரிய இனம் சார்ந்த மாற்றத்தால் வலுப்படுகிறது. வெள்ளையர்களானாலும், வசதிப்படைத்தவர்களானாலும் மேம்பட்டிருக்கும் பேபி பூமர் (Baby Bomer) தலைமுறையினர், இன்னும் 20-லிருந்து 30 வருடங்களுக்குள் இளையதலைமுறையினரால் மாற்றி அமைக்கப்படும். அந்தத் தருணத்தில் இருக்கம் ஜனத்தொகை ஒரு பொருத்தமில்லாத குறைந்த நிலையில் இருக்கும் ஒரு ஜனத்தொகையாக மாறிவிடும். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட வயது தொடர்பான மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளை லிச்டர் (Lichter) ஆராய்கையில், "ஒரே பாலார் திருமணம், வெவ்வேறு இனத்தின் திருமணம், போதை மருந்துகள் சட்டப்பூர்வமாக்கப்படுதல், திருமணம் ஆகாமல் கூடி வாழ்ந்து பிள்ளைப் பெறுதல் போன்ற பல நிகழ்ச்சிகள்

ஏற்படுகின்றன. பியூ (Pew) ஆராய்ச்சி மையத்தில் துணைத்தலைவராய் இருக்கும் பால் டெய்லர் என்பவர், "அமெரிக்காவின் சமுதாய நிகழ்ச்சிகள் அனைத்தும் எந்த ஒரு நடக்கையையும் சகித்துக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் பழகிக்கொண்டார்கள்" என்று கூறுகிறார்.

PWC தனது ஆய்வின் முடிவில் இவ்வாறு கூறுகிறது. இன்றுவரை வரலாற்றில் அமெரிக்காவைப்போல் பண்பிலும், மதத்திலும், அரசியலிலும் மாறுபட்ட சமுதாயம் இதுவரை இருந்ததில்லை. ரோம சாம்ராஜ்யம் வீழ்வதற்கு முன்பு இவ்வாறு இருந்தது. இவ்வாறு பல விதங்களில் மாறுபட்ட ஒரு சமுதாயம் தனக்குள் நிலைத்து நிற்பதற்கு மிகக் குறைந்த அளவிலேயே உதாரணங்கள் இருக்கிறது. ஆனால் தோல்வி அடைந்ததற்குப் பல உதாரணங்கள் உள்ளது. இப்படிப்பட்ட மாறுபட்ட கருத்துகளைக்கொண்ட சமுதாயத்தின் எதிர்காலத்திற்குரிய பதிலை வேதாகமம் மட்டுமே தர இயலும்.

**நீதிமுறைமை மற்றும் உரிமை**

"இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள். " (ஏசாயா 60:2-3)

தற்சமயம் நடந்துக்கொண்டிருக்கும் நிகழ்வுகளைக் கண்ணோக்கும்பொழுது, முன்னாளில் நடந்ததைவிட கடந்த நூறு ஆண்டுகளாக, பொருளாதாரத்திலும், அரசியலில் மற்றும் சமுதாயத்திலும் பல மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள் நடந்துக்கொண்டிருக்கின்றது என்பது உறுதியானது. எவ்விதமான அநீதிகளும் இனிமேல் ஏற்றுக்கொள்ளப்படாது. 1948-இல் ஐக்கிய நாடுகளின் பொது மாநாடு, உலகளாவிய மனித உரிமையைத் தனதாக்கிக்கொண்டபின், மனித உரிமைப் பாதுகாப்பு என்பது ஒரு சர்வதேச விதிமுறையாக மாறிவிட்டது. 250-க்கும் மேற்பட்ட சர்வதேச மனித உரிமை செயற்கருவிகள் (தனிநபர், பலர் இணைந்து, அரசியல், பண்புகள், சமுதாயம் மற்றும் பொருளாதாரம் உரிமைகள்பற்றி) ஒப்பந்தமாகி கையெழுத்து இடப்பட்டுள்ளது. மக்கள் நிறைந்த இடங்களில் மாறுபட்ட தன்மை அதிகரிக்கும் இந்நாளிலே, உலகளவில் மனித உரிமை வழக்குகள் மிக விரைவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட நாடுகள் எடுக்கும் முயற்சிகளாலும் செயல்களாலும் மக்களிடையே மிகுந்த அழுத்தம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

இந்த மனித உரிமைக்கு நாம் கொடுக்கும் தோற்றம், உண்மையான மனித உரிமைக்கு நம் புல உணர்வுகள் மூலம் நாம் கற்பனை செய்யும் உரிமைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை மங்கச் செய்கிறது. ஆகையால் இன்று வளர்ந்துவரும் இந்த மாறுபட்ட பண்புகளைத் தடுக்க, பல நாடுகளில் தலைவர்கள் போராடி வருகின்றனர். அதனால் குழப்பமும் ஒழுங்கற்ற நிலையுமே அதிகரித்து வருகின்றது. ஜார்ஜ் ஆர்வெல்லின் (George Orwell) விலங்கு பண்ணையில், கம்யூனிஸ ரஷ்யாவை பழிக்கும் நோக்குடன், பண்ணையை ஆட்சி செய்யும் ஏழு விதிமுறைகள் அங்குக் களஞ்சியத்தின் அருகில் எழுதி தொங்க விடப்பட்டுள்ளது. கொஞ்சம் கொஞ்சமாய் அந்த விலங்குகள் எழுதப்பட்ட விதிமுறைகளை அகற்றிவிடும். இறுதியாக அதில் ஏழு என்ற எண் மட்டுமே இருக்கும். "எல்லா விலங்குகளும் சமம்," ஆனால் இப்பொழுது இன்னும் ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது. "சில விலங்குகள், மற்ற விலங்குகளை விட இன்னும் கொஞ்சம் சமமாக உள்ளது."

அதுபோல் இன்றைய சூழலில் மாறுபட்ட பண்பானது நீதியின் வளர்ச்சியை ஒதுக்கிவிட்டது. மற்றும் பெரும்பாலான உலக ஜனத்தொகையின் இருதயங்களில் சுயநலமே உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சிசெய்து வருகிறது. நீதியின் சீர்திருத்தம் பிடுங்கி எரியப்பட்டு, சமத்துவம் என்ற வேஷம் தரித்த தங்களையே உயர்த்திக்கொள்ளும் நீதியின் மேடைகளே இன்று செயலாற்றிவருகின்றது.

**சுயநலத்திற்கு பதிலாக அன்பு**

"இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரிட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்." (மல்கியா 3:15)

கடந்த ஆறாயிரம் வருடங்களாக இந்த மனுக்குலத்திற்கு சாத்தான் ஒரு மிகப் பெரிய அதிகாரியாகி சுயநலம் போன்ற இழிவான கொள்கையைப் பரப்பி ஆட்சிசெய்து வருகின்றான். கிறிஸ்து இயேசு தன் இராஜ்யத்தை ஸ்தாபிக்கையில், இந்த வரிசைமுறை தலைக்கீழாய் மாறிவிடும். அன்பு மற்றும் பிறருக்கான முன்னுரிமை எல்லோருக்கும் போதிக்கப்பட்டு ஏற்றுவிக்கப்பட்டு, வெகுமதியும் அளிக்கப்படும்.

சுயநலத்தை விட்டு அன்பு செய்யும் இந்த மாற்றம் திடீரென்று ஏற்படாது. அன்பின் சட்டங்கள் இந்த உலகத்திற்குப் படிப்படியாகப் போதிக்கப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசாயா 26:9)

ஏசாயா குறிப்பிடும் இந்த நியாயத்தீர்ப்பு வேலைகள் இராஜ்யத்தில் ஆசீர்வாதத்தைப் பங்கிடுவதற்கு இசைவாக நடந்தேறும். மக்களை அச்சுறுத்த திட்டமிடும் அந்த மரபு வழியான நியாயத்தீர்ப்புபோல் அது இருக்காது. தேவனின் சட்டங்கள் ஒவ்வொரு மக்களின் இருதயத்திலும் எழுதப்பட்டிருக்கும் என்று தீர்க்கதரிசி கூறுகையில், இராஜ்யத்தில் நீதியின் நெறிமுறைகள் முழுமையான ஒரு ஒழுக்கத்தோடு இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறார். (எரேமியா 31:33)

இந்தச் சுயநல உலகின் மதிக்கேடான வீழ்ச்சியை நம்மால் தடுக்க இயலாது. ஆனால் நாம் "கிறிஸ்துவின் தூதர்களாக" இருக்க முடியம் (1 கொரிந்தியர் 5:20). நாம் தூதர்களாக இருக்கும்போது, பிறரை நடத்தும் செயல்முறைகளில் நாம் தனிப்பட்ட நேர்மையைக் காண்பிப்பது நமது கடமையாகும். உலகத்தாரின் நலன்களில் நாம் ஒழுக்கத்தோடும் ஒரு குறிக்கோளோடும் செயல்பட வேண்டும். மேலும் இறுதியாக, இக்காலத்தில் நடக்கும் முக்கியப் பிரச்சனைகளில் அக்கறைக்காட்ட வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக, நமக்குக் குடியுரிமை பரலோகத்திலுள்ளது என்று நினைவில்கொண்டு, தேவ வார்த்தையில் காணப்படும் இவ்வுலகத்தின் கொள்கைகளையும் நாம் பிரதிபலிக்க வேண்டும். நாம் இந்த உலகின் நிலைமையில் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருந்தாலும், மனுகுலத்தின் மீது பரிவு கொண்டவர்களாய், ஒவ்வொரு மனிதனுக்கும் சரியான நீதி வழங்க இந்தப் புதிய யுகத்தை எதிர்நோக்கி இருக்க வேண்டும். (2 பேதுரு 3:13)

**சங்கிலியாண்டபுரம் தேவமாணவர்கள், திருச்சி.**

**கைப்பேசி : 924461141,8122224919**